Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



மொறாயஸ்

பல், மூக்குக் கண்ணாடியகம்

1962 ஆம் ஆண்டு முதல் வெலிங்டன் திரையரங்கிற்கு முன்னால் இயங்கிய மொறாயஸ் வாடிக்கையாளர்களின் நலன் கருதி

இல. 545, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் 28.06.2004 தொடக்கம் இயங்கி வருகிறது

- பல்கட்டுதல், பல் கிளிப்போடுதல்
- இலவச முறையில் கண் பரிசோதனை செய்து மூக்குக்கண்ணாடி வழங்கப்படும்

இல.545, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: இல. 5 பலாலி வீதி (அப்பலோ வைத்தியசாலை முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பேசி: 021-222 3386



மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 15 (04.07.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:275


# புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா மறுப்பு!

## சொல்ஹெய்மிடம் தெளிவாகத் தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் வடக்கு, கிழக்குக்கான நிர்வாகக் கட்டமைப்பை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறுத்துள்ளதாக ஜனாதிபதியுடன் நெருங்கிய தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.**



அண்மையில் கொழும்பு வந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கிளிநொச்சி சென்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின் கொழும்பு திரும்பியிருந்தார்.

இதனையடுத்து கடந்த வியாழக்கிழமை சொல்ஹெய்ம் ஜனாதிபதியைச் சந்தித்து, புலிகளுடன் நடத்திய சந்திப்புக்கள் குறித்து விளக்கினார்.

இவ்வாறு தன்னுடன் சந்திப்பை நடத்திய சொல்ஹெய்மிற்கே ஜனாதிபதி தனது மேற்கண்ட முடிவை அறிவித்ததாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையென்பது சமஷ்டி அமைப்பதற்கு உட்பட்டதல்ல, மாறாக இது தனிநாட்டை நிறுவுவதற்கான அடிப்படையெனவும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்ததாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ்.விளையாட்டு மைதானத்தில் தமிழீழ இளையோர் தடகள விளையாட்டு விழா ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு எட்டு மாவட்டங்கள் ஒன்றிணைந்த முதலாவது தமிழீழ இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழா, நேற்று யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக, பாண்ட் வாத்திய இசையுடன் ஒவ்வொரு மாவட்ட அணி வீரர்களும் தனித்தனிக் குழுவாக அழைத்து வரப்பட்டு அணிவகுத்து நின்றனர்.


(12 ஆம் பக்கம் பார்க்க)




தேசியக் கொடியை ஏற்றுகிறார் இளம்பரிதி



ஒலிம்பிக் தீபத்தை கையளிக்கிறார் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா.

## ஜீவன் கூலின் விஜயத்திற்கு பல்கலை மாணவர் எதிர்ப்பு!

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவைச் சேர்ந்த பேராசிரியர் ஜீவன் கூல், யாழ்.பல்கலைக் கழகத்துக்கு மேற்கொண்ட விஜயத்துக்கு பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராஜாவின் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதற்காக பேராசிரியர் ஜீவன் கூல் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தார்.

இவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்த பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக வாசலுக்குக் குறுக்கே பல சுலோகங்களைக கட்டித் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பல்கலைக்கழகங்களில் கட்டப்பட்டிருந்த சுலோகங்களில் "மாமனிதர் நினைவுப் பேருரையை வழங்க


(12 ஆம் பக்கம் பார்க்க)


## பளையில் நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் பலி!

(கிளிநொச்சி)

பளைப் பகுதியில் லொறி ஒன்றும், மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று மாலை 3.30 மணியளவில் இடம் பெற்ற இந்த விபத்தில் பளையைச் சேர்ந்த 29 வயதான மனோ என்பவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் புதுக்குடியிருப்பு, 4 ஆம் வட்டாரத்தை நிரந்


(12 ஆம் பக்கம் பார்க்க)


## கரும்புலிகள் நாள் நிகழ்வுகளில் பங்கேற்க மக்களுக்கு அழைப்பு

யாழ். குடாநாட்டில் நாளை நடைபெறவுள்ள கரும்புலிகள் நாள் நிகழ்வுகளில்அனைத்து தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறு கரும்புலிகள் நினைவு நாள் ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

கரும்புலிகள் தினமான நாளை யாழ்.குடாநாட்டில் மூன்று இடங்களில் நினைவு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

வடமராட்சிப் பிரதேசத்தில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திலும், தீவகத்தில் புங்குடுதீவு பெருங்காட்டுச் சந்தி கந்தசாமி கோயில், காரைநகரில் கதிர்காம சுவாமி கோயில் ஆகிய மூன்று இடங்களிலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குடாநாட்டிலுள்ள பொது அமைப்புக்களும் அனைத்து மக்களையும் கரும்புலிகள் நாள் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளன.

# ராணுவ புலனாய்வு பணிப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்!

## கருணாவுக்கு உதவியதை அறிவிக்கவில்லையாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்ட கருணாவை பாதுகாப்பாக கொழும்புக்கு கொண்டு வந்ததை அரசாங்கத்துக்கு இராணுவப் புலனாய்வுத்துறை தெரியப்படுத்த தவறியமைக்காக - இராணுவபுலனாய்வுத்துறையின் பணிப்பாளரான பிரிகேடியர் கபில ஹெந்த விதாரன உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்குப் பதிலாக- இராணுவப் புலனாய்வுத்துறையின் புதிய பணிப்பாளராக - வாழைச்சேனை 232 ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் தயா இரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நாளை பதவியேற்கவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி மட்டக்களப்பில் இருந்து கருணா கொழும்புக்கு வருவது குறித்து இராணுவப் புலனாய்வுத்துறைக்கு தெரிந்திருந்தும் இதுபற்றி இராணுவ அதிகாரி ஒருவர் வெலிக்கந்தவிலுள்ள 23 ஆவது டிவிசன் தலைமையகத்துக்கு முன் கூட்டியே அறிவித்திருந்தார் என்றும் கூறப்பட்டது.

கருணா விவகாரத்துடன் அரசுக்கு எந்தத் தொடர்பும் இல்லாத போதும், சில இராணுவ அதிகாரிகள் இந்தச் சம்பவத்துடன் தொடர்பு பட்டிருந்ததாகவும், இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமைச்சர் மங்கள சமரவீரவினால் இந்த அறிவிப்பு வெளியாகி ஒரு வாரகாலத்தாலேயே பிரிகேடியர் கபில ஹெந்த விதாரன இராணுவப் புலனாய்வுத்துறையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

எனினும், இராணுவத் தளபதியோ, ஜனாதிபதியோ கருணாவுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கவில்லை என்று மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இராணுவப் புல


(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

Your friend in the skies...

# இளையோர் தேசிய தடகள விளையாட்டு விழாவின் சில காட்சிகள்





யாழ்.மாவட்டம்



கிளிநொச்சி மாவட்டம்



முல்லைத்தீவு மாவட்டம்



மன்னார் மாவட்டம்



திருகோணமலை மாவட்டம்



மட்டக்களப்பு மாவட்டம்



அம்பாறை மாவட்டம்



வவுனியா மாவட்டம்

## லெப்.கேணல் கில்மனின் 9 ஆவது ஆண்டு நிகழ்வு!

(யாழ்ப்பாணம்)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முன்னாள் சிறப்புத் தளபதி லெப்ரினட் கேணல் கில்மனின் 9 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நாகர் கோவிலில் அமைந்துள்ள மேஜர் கிண்ணி நினைவாலயத்தில் களமுனைத் தளபதிகளில் ஒருவரான மிரேஸ் தலைமையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் களமுனைத் தளபதி தென்னரசன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தேசியக் கொடியினை வடபோர் முனை கட்டளைத் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் குமரன் ஏற்றி வைக்க படையணியின கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தாக்குதல் தளபதி பிரபாலன் ஏற்றி வைத்தார்.

மாவீரர் கில்மனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை படையணியின் தளபதிகளில் ஒருவரான செங்கோலன் ஏற்றிவைத்தார்.

மலர் மாலையினை குட்டிச்சிறி மோட்டார் படையணியின் நாகர் கோவில் பொறுப்பாளர் மருதவாணி அணிவித்தார். தொடர்ந்து மலரஞ்சலியை வடபோர் முனைத் தளபதிகளில் ஒருவரான பேரின்பம் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து போராளிகள் மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது. சாள்ஸ் அ‍ன்ரனி சிறப்புப் படையணியின் பொறுபபாளர்களில் ஒருவரான செந்தூரனின் தலைமையில் அரங்க நிகழ்வுகள இடம்பெற்றன.

இந்தநிகழ்வில், சிறப்புரையினை தளபதி குமரனும், நினைவுரையினை படையணியின் தளபதிகளில் ஒருவரான மிரேஸ் நிகழ்த்தினார்.

### மாதர் சங்க அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறையில் கடன்

வடமராட்சி கிழக்கு - குடத்தனை மாதர் சங்க அங்கத்தவர்களுக்கு அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு நியாப் திட்டத்தின் கீழ் ஐந்து லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிதியின் மூலம் நீர் இறைக்கும் இயந்திரம், உபஉணவுப்பயிர்ச் செய்கை, சிறுவியாபாரம் ஆகியவற்றை அங்கத்தவர்கள் மேற்கொள்ள முடியும். இந்தநிதி கடன் அடிப்படையில் சுழற்சி முறையில் வழங்கப் படவுள்ளது. (122)

### பொங்கல் பெருவிழா

காரைநகர் கருங்காலி கொதிரிப் பெரியதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் பெருவிழா இன்று நடைபெறவுள்ளது.

இந்தப் பொங்கல் பெருவிழாவை தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது. (118)

### கரும்புலிகள் தின நிகழ்வுக்காக

## அனைத்து வர்த்தக நிலையங்களை மாலை 4 மணிக்கு பின் மூடவும்

### வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் தெரிவிப்பு

கரும்புலிகள் தினமான நாளை சகல வர்த்தக நிலையங்களையும் மாலை நான்கு மணியுடன் மூடி கரும்புலிகள் தின நிகழ்வில் சகல வர்த்தகர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சம்மேளனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

நாளை வடமராட்சியில் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்திலும், தீவகத்திலும் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்தநிகழ்வுகளில், வர்த்தகர்களை மாலை நான்கு மணிக்கு வர்த்தக நிலையங்களை மூடி இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**The Royal College of Jaffna**

ஆங்கிலம் படிக்கின்றீர்களா, புத்திசாலியாகவும் இருக்கின்றீர்கள். ஆனால் கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.
Spoken English By :
விக்கினேஸ்வரன் ஆச்சாரி :
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (சி-2734)

**நாகம்ஸ்** சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன
அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
ரஜினி, சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன் நடித்த
**படையப்பா**
06.07.2004 முதல் **ஜே ஜே** (சி-2723)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
**கில்லி**

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி. ஞாயிறு இரவு 8.45(பு.நே)
EHTREMITIEH (சி-2723)

**ராஜா** யாழ்ப்பாணம்.
சூரியா, ஜோதிகா, விவேக் மற்றும் பலர் நடித்த
**பேரழகன்**

(சி-2623)
காட்சிநேரம்:-10.30,2.30,6.30 (பு.நே)

## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

அளவெட்டியில் (அளவையூரில்) நிலத்துடன் கூடிய தனியான வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: நாதன். தொ.பே:077 7738876 (776)

### பனம் விதை சேகரித்தல்

ஐயாயிரம் பனம்பழ விதைகளை சேகரிப்பதில் ஆர்வமுடையவர்கள் எழுத்து மூலம் தொடர்பு கொள்க: விண்ணப்ப முடிவுத் திகதி 30.07. 2004 திருமதி.வே.கெ. தனபாலன், சிவதர்சினி பனம் பொருள் உற்பத்தி தனியார் நிறுவனம், நுணாவில், சாவகச்சேரி. (758)

### இயந்திர நண்டுகள்

விஞ்ஞானியைக் கொலை செய்தது யார்? இயந்திர நண்டு! விபரம் அறிய வாசியுங்கள் 'இயந்திர நண்டுகள்' விலை ரூபா அறுபது. சாவகச்சேரியில் கிடைக்குமிடம் : செந்தூர் புத்தக நிலையம், பஸ் நிலையம். யாழ்ப்பாணத்தில் - மண்டேலா புத்தகசாலை பஸ் நிலையம், உயர் கல்லூரி புத்தக நிலையம் ஆரிய குளம் சந்தி. (773)

### வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை சுவாமிநாதர் லேன், வளன்புரத்தில் 21/2 பரப்பில் - ஒன்பது அறைகள் கொண்ட விசாலமான வீடு விற்பனைக்குண்டு. விலை 30 லட்சத்துக்கு மேல். பார்வையிடத் தொடர்பு:T.P:0776005425, 2226682. (777)

# சிறிலங்கன் எயர் லையன்ஸ் பணியாளர்கள் உண்ணாவிரதம் நடத்தப்போவதாக எச்சரிக்கை

## நாளை முதல் ஆரம்பமாகலாம்

(கொழும்பு)

சிறிலங்கன் எயர் லைன்ஸ் விமானசேவையின் விமானப் பொறியியலாளர்களும், அதன் உள்ளகப் பணியாளர்களும் நாளை முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விமானச் சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களை மீளவும் பணியில் சேர்த்துக்கொள்ளுமாறு கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைத் தாம் மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாக சிறிலங்கன் எயர் லைன்ஸ விமான சேவையின் விமானப் பொறியிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீளவும் பணியில் இணைத்துக்கொள்ளுமாறு தொழில் ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்ட கோரிக்கையை முகாமைத்துவம் தொடர்ந்தும் அலட்சியம் செய்கிறது.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து தம்மால் முன்னர் நடத்தப்பட்ட போராட்டங்கள் தொடர்பாக விமானசேவையின் முகாமைத்துவ பீடம் உரிய கவனம் செலுத்தி தவறியமை காரணமாகவே, போராட்டத்தைக் க்டுமையாக்குவதற்கு தாம் முடிவெடுத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# தனியார் சிற்றூர்திகளுக்கு அரசு விசேட கட்டுப்பாடுகள்!

(கொழும்பு)

தனியார் சேவையில் ஈடுபடும் அனைத்து சிற்றூர்தியினருக்கும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் விசேட செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, சிற்றூர்திகளின் மிதிபலகையில் பயணிகள் நின்று பயணம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. சிற்றூர்திகள் பயணித்துக் கொண்டிருக்கையில் பயணிகள் எவரையும் மிதிபலகையில் நிற்க நடத்துநர் அனுமதிக்கக் கூடாது. அத்துடன் சிற்றூர்தி, சேவையில் ஈடுபடும் நேரங்களில் மேலதிகமாக ஒருவரை வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் சாரதியோ அல்லது நடத்துநரோ தண்டனைக்குள்ளாவர்.

வாகனத்தில் ஹோன் அளவுக்கதிகமாக பாவிப்பதும், தேவையற்ற விதத்தில் பாவிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை தனியார் பஸ் உரிமையாளர்கள் மிகவும் இறுக்கமான முறையில் கடைப்பிடிக்க வேண்டுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# அரசு மன்னிப்பு கோரும்வரை ஆர்ப்பாட்டங்கள் தொடரும்!

## ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் தமது உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு அரசாங்கம் மன்னிப்புக்கோரும் வரை - தாம் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளப்போவதாக ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

களனி விகாரையில் முடிவடைந்த மூன்று நாள் பாதயாத்திரையின் பின்னர் - கருத்துத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கம் தொடர்ந்தும் தம்மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை - நேற்றுமுன்தினம் வரக்கா பொலவில் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பௌத்தத்தைக் காப்பதற்காக நாடாளுமன்றம் சென்றதாகக் கூறும், ஜாதிக ஹெல உறுமயவினர் - பௌத்த தர்மத்திற்கு எதிராக செயற்படுவதாகக் குற்றம் சுமத்தினர்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கப் போவதாக வெளியாகியுள்ள தகவலின் மத்தியிலேயே இந்த முரணபாடான கருத்துக்கள் இரண்டு தரப்பிலும் கூறப்பட்டு வருகின்றது. (01)

# அரசியல்வாதிகள் தவறான வழியில் மக்களை வழிநடத்தியதாலேயே பிக்குகள் அரசியலில் குதித்தனராம்!

(கொழும்பு)

அரசியல் சாசனத்தைப் பயன்படுத்தி பௌத்த தேரர்களையும், மக்களையும் தவறான வழிக்கு இட்டுச் செல்ல அரசியல்வாதிகள் நடவடிக்கைகளை எடுத்ததாலேயே தேரர்கள் அரசியலில் ஈடுபடவேண்டி ஏற்பட்டதாக ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த அத்துரலியே சிறிரத்ன தேரர் தெரிவித்தார்.

இதன் காரணமாக ஜனாதிபதி சந்திரிகா - தான் நினைத்ததைச் சாதிக்க முடியாதிருக்கிறது. அதன் காரணமாகவே எமக்கெதிராக அவதூறான குற்றச்சாட்டுக்களை அவர் வெளிட்டு வருகிறார்.

முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவதை அவர் நிறுத்தி, பௌத்த பிரதிநிதித்துவமும், தேரர்கள் கொண்டுள்ள யதார்த்தத்தையும் ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும்.

வறக்காபொலையில் இடம்பெற்ற கூட்டமொன்றில், அரசியலில் நுழைந்த பௌத்த தேரர்களை தாக்கும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுறியுள்ளமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சிலர் பௌத்தத்தை பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு நாடாளுமன்றத்துக்கு வந்து அங்கும் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாக, வறக்காபொலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்துக்கு எதிராக பொலனறுவையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபோது அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியால் மாவட்ட மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டமொன்று இன்று பொலனறுவை மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

நகரின் மத்தியில் இன்று முற்பகல் 11 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகுமென ஐக்கிய தேசிக் கட்சியின் செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டங்கள் இன்று முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை பொலனறுவை, அனுராதபுரம், கேகாலை, கண்டி, கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களை மையப்படுத்திய இடங்களில் நடைபெறவுள்ளது.

## கொள்ளைகளில் ஈடுபட்டோர் பொலிஸாரால் கைதாகினர்!

(கொழும்பு)

இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவாகளை சிலாபம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

சிலாபம் மற்றும் ஏனைய இடங்களில் கொள்ளைச் சம்பவங்களில் இவர்கள் ஈடுபட்டதாக விசாரணைகள் மூலம தெரியவந்துள்ளது.

சம்வத்தில் ஈடுபட்டவர்களிடம் கூரிய ஆயுதஙகள், இராணுவ சீருடைகள், கையடக்கத் தொலைபேசிகள், மோட்டார் சைக்கிள்கள் என்பன மீட்கப்புட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# புலிகளுடனான சமாதான பேச்சுக்களுக்கு அரசு கால அட்டவணை தயாரித்தால் ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளிக்கும்!

## கட்சி வட்டாரங்களிலிருந்து தகவல்

(கொழும்பு)

இலங்கையில் ஜனநாயக முறையை பலமுள்ளதாக மாற்றுவதற்கும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கும் அரசாங்கம் உடன்பட்டு - அதற்கு காலஅட்டவணையோடு ஆயத்தங்கள் மேற்கொண்டால் ஆதரவு வழங்குவதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது இடைநடுவில் நின்றுபோயுள்ள சமாதானச் செயற்பாடுகளுக்கு விரைவில் உயிர்கொடுத்து - விடுதலைப் புலிகளுடன் முடிந்தளவில் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா விரும்பினாலும், அதற்கு நாடாளுமன்றத்திற்குள் அரசுக்கு பெரும்பான்மைப் பலம் இல்லை.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனநாயகத்தை பலமுள்ளதாக மாற்றுவதற்கும், சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கும் - அரசுக்குத் தேவையான ஆதரவை எதிர்க்கட்சி வழங்க வேண்டுமென சிங்கள பொது அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தயாரித்த வேலைத்திட்ட வரைவுப் பிரதி யொன்று ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களின் ஊடாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த ஒழுங்கின்படி இலங்கையின் ஜனநாயகத்தைப் பலமுள்ள தாக்குவதன் பொருட்டு, நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தில் - புதிய திருத்தங்களைச் செய்வதெனவும் கவனமெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஒழுங்கின்படி இலங்கையின் ஜனநாயகத்தைப் பலமுள்ள தாக்குவதன் பொருட்டு, நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தில் புதிய திருத்தங்களைச் செய்வதெனவும் கவனத்திலெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தற்போது முறைமைசார் அரசியல் யாப்பு சபையை உருவாக்குவதில் தற்போது உருவாக்கப்பட்டுள்ள, சுதந்திர விசாரணைக்குழுவை பலமுள்ளதாக மாற்றுதல், சுதந்திர ஊடக விசாரணைச் சபையை அமைத்தல் உட்பட பல ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்தல் மற்றும் அதற்கான தடைகளை நீக்குதல் என்பன குறித்த ஆலோசனைகள் பலவும் உத்தேச வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவற்றைச் சமர்ப்பித்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர்களும் இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இதன்படி இந்த வேலை ஒழுங்குகள் குறித்து எதிர்க்கட்சியினர் தமது உடன்பாட்டை வெளிப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சி, பல்வேறு பேச்சுக்களை நடத்தியிருந்தது.

இந்த வேலை ஒழுங்குகளுக்கான அடிப்படைக்காரணிகள் குறித்து ஆராய, அரசு சாதகமான சமிக்ஞையை காண்பித்தால், தொடர்புடைய ஆலோசனைச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளு மன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அரசுக்கு முழுமையான அதரவு வழங்குவதற்கு எதிர்கட்சி ஆயத்தமாக உள்ளதாக அந்த அறிக்கைகள் மேலும் தெரிவித்தன.

# பட்டதாரிகளிடம் உறுதிமொழி; அழப்படை மனித உரிமை மீறல்!

வேலைவாய்ப்புக் கோரும் பட்டதாரிகளிடம் இதுவரை தொழில் எதனையும் செய்யவில்லை என உறுதிமொழியைக் கோருவது அடிப்படை மனித உரிமை மீறலாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துல விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளின் நியமனத்தில் அரசின் நடவடிக்கை குறித்து, கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவீத்ததாவது.

பட்டதாரிகள் தாம் தொழில் புரியவில்லை என்று உறுதிமொழி வழங்க வேண்டும் என நிதியமைச்சர் கோரியுள்ளார். தாம் பெற்ற பட்டத்திற்கு வேலைகளை வழங்குகின்றபோது இதை ஒரு தகுதியாகக் கோருவது அடிப்படை மனித உரிமைமீறலாகும் எனத் தெரிவித்தார்.

# கரையோர பாதுகாப்புப் படைப்பிரிவினை கலைக்க நீரியல்வள அமைச்சு முடிவு!

(கொழும்பு)

கரையோர பாதுகாப்பு படைப்பிரிவைக் கல்லப்பதற்கு கடற்தொழில் நீரியல் வள அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையைச் சூழ்ந்துள்ள கரையோரப் பகுதிகளின் கடல் வளங்களைப் பாதுகாத்தல், கடல் வளங்களை சட்டவிரோதமாக வெளிநாட்டு மீனவர்கள் எடுத்துச் செல்வதைத் தடுத்தல் ஆகியனவே கரையோரப் பாதுகாப்புப் படைப்பிரிவின் பிரதான நோக்கமாகும்.

ஆனால் இங்கு கரையோரப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள படையினருக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படவில்லை என கடற்தொழில் நீரியல் வள அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க சுட்டிக் காட்டியுள்ளார்.

கரையோரப் பாதுகாப்புப் படைப் பிரிவைக் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதை அடுத்து இந்தப் பிரிவில் கடமையாற்றும் ஊழியர்களை கரையோர பாதுகாப்புத் திணைக்களத்திற்கு மாற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (01)

# யூரோ வெற்றிக் கிண்ணத்தை தட்டிச் செல்லப் போவது யார்!

## கிரீஸ் - போர்த்துக்கல் இன்று பலப்பரீட்சை



ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டி லிஸ்பன் நகரில் இன்று நடைபெறவுள்ளது. இதில் போர்த்துக்கல் - கிரீஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இரு அணிகளுமே முதன்முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளதால், அதிக எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. அத்துடன் 'லீக்' ஆட்டத்தில் இரு அணிகளும் மோதியிருக்கின்றன. இதில் கிரீஸ் 2:1 என்ற கணக்கில் வென்றிருக்கிறது.

இந்தப் போட்டித் தொடரில் கிரீஸ வீரர்களின் ஆட்டம்தான் நம்பமுடியாத வகையில் அபாரமாகவுள்ளது. காலிறுதியில் தற்போதைய சம்பியனான பிரான்ஸை அதிர்ச்சிகரமாகத் தோற்கடித்து இருந்தது. அரையிறுதியில் தோல்வியைச் சந்திக்காத செக்குடியரசை வீழ்த்தியது.

பின் களத்தில் அந்த அணி மிகவும் பலமாக இருக்கிறது. இதனால், எதிரணி வீரர்கள் கோல் போடக் கடுமையாகத் திணறுகின்றனர். எல்லா வீரர்களும் சிறப்பாக ஆடுவது அந்த அணியின் கூடுதல் பலமாகவுள்ளது.

போர்த்துக்கல் அணியைப் பொறுத்தவரை மிகவும் பலமானதாக இருக்கிறது. 'லீக்' ஆட்டத்தில் இந்த அணி தோற்றிருந்ததாலும் தற்போது மிகவும் கவனமுடன் இருக்கிறது. ரொனால்டோ, லூயிஸ் பிகோ, ருயி கோஸ்டா போன்ற உலகின் தலைசிறந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர். மேலும் அந்த அணியின் கோல் கீப்பர் ரிக்கார்டோ பலம் சேர்ப்பார்.

உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு போர்த்துக்கலுக்கு சாதகமாக இருக்கும். அதேநேரத்தில் கிரீஸ் அணியும் தலைசிறந்த நாடுகளைத் தோற்கடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறியிருக்கிறது. இரு அணிகளுமே பலம் வாய்ந்தவை என்பதால் இறுதிப்போட்டி விறுவிறுப்பாக இருக்கும்.

# பாடசாலை கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலயமும்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் 14 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இந்தமுறை கிளிநொச்சி மகா வித்தியாலய அணியும் இணைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்ற இந்தச் சுற்றுப்போட்டியில் 'எ' பிரிவில் பெரியபுலம் மகாவித்தியாலம், யாழ் இந்துக்கல்லூரி, 'சென். ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி என்பனவும், 'பி' பிரிவில் சென் பற்றிக்ஸ் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யாழ்பாணக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி என்பனவும் இடம்பெற்றுள்ளன.

'எ' பிரிவில் இருந்து ஹாட்லிக் கல்லூரியும், 'பி' பிரிவில் இருந்து மகாஜனாக் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி என்பனவும் அஸ்ரா கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை. ஏனைய 10 அணிகளும் யாழ். மாவட்டத்தில் இருந்து அஸ்ரா கிண்ண போட்டிகளில் கலந்துகொள்கின்றன. (58)

# கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு துன்னாலையில் விளையாட்டு விழா

கரும்புலிகள் நாளை முன்னிட்டு துன்னாலை கலிகைக்கந்தன் விளையாட்டுக்கழகம் நடத்தும் விளையாட்டுப் போட்டி நாளை காலை 6.00 மணிக்கு கலிகைக் கந்தன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் செல்லத்துரை தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வடமராட்சி கோட்ட அரசியற துறைப் பொறுப்பாளர் இ.தயா பொதுச்சுடரினையும், தேசியக் கொடியினை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் சி.பாப்பாவும் ஏற்றுவர்.

கரும்புலிகளின் பொதுத் திருவுருவப்படத்துக்கு கரும்புலி கப்டன் மில்லரின் தாயார் வ.கமலாதேவி ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவிப்பார்.

# முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அவுஸ்ரேலிய அணியிடம் தோல்வி கண்டது



டார்வினில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 149 ஓட்டங்களால் இலங்கை அணியைத் தோற்கடித்தது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்ப மான இந்த டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் அவுஸ்ரேலியா 207 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. இரண்டாவது இனிங்ஸில் 201 ஓட்டங்களை அவுஸ்ரேலியா பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இலங்கை அணி முதலாவது இனிங்ஸில் 97 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது. 311 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் நேற்று இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸில் விளையாடத் தொடங்கியது.

முதல் இனிங்ஸில் இலங்கை அணி எதிர்கொண்ட நெருக்கடியைப் போலவே நேற்றும் இந்த அணி நெருக்கடியைச் சந்தித்தது.

அவுஸ்ரேலிய'ப் பந்து வீச்சாளர் கஸ்பரோவிச் நேற்றைய ஆட்டத்தில் நாயகனாக நின்று, இலங்கை அணி வீரர்களைக் கலக்கத்துக்குள் ளாக்கினார்.

இலங்கை அணியின் முன்னணி ஆட்ட வீரர்கள் அனைவருமே அடுத்தடுத்து சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றனர்.

ஜெயவர்த்தன ஆகக்கூடுதலாக 44 ஓட்டங்களையும், சமரவீர 32 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனைய வீரர்கள் எவருமே 17 ஓட்டங்களைத் தாண்டவில்லை.

அவுஸ்ரேலியப் பந்து வீச்சாளர்களின் நெருக்குதலில் 65.4 ஓவர்களிலேயே 162 ஓட்டங்களுக்குள் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அவுஸ்ரேலிய அணி சார்பில் கஸ்பரோவிச் 39 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களையும், மக்ரா இரண்டு விக்கெட்டுக்களை யும் வீழ்த்தினர்.

இதன்மூலம் அவுஸ்ரேலிய அணி 149 ஓட்டங்களால் முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றது.

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெறும் அஸ்ரா கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில், இன்று யாழ். மாவட்டத்தில் இரு போட்டிகள் நடைபெறவுள்ளன.

யாழ். இந்துக் கல்லூரி மைதா னத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதும் போட்டியும்-

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரியும் மோதும் போட்டியும் நடைபெறவுள்ளது.(58)

## கரும்புலிகள் நினைவு

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதியாட்டம் இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவுதினத்தையொட்டி யாழ். மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையினருடனும், பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடனும் நடாத்தப்பட்டுவரும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

வல்வை விளையாட்டுக் கழகத் தலைவர் மு.தங்கவேல் தலைமையில் தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு இந்தப் போட்டி ஆரம்பமாகும்.

இதற்குப் பிரதம விருந்தினர்களாக கடற்புலிகளின் தளபதி பா. மங்களேஸ், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி, கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வல்வை விளையாட்டுக் கழக முன்னாள் வீரர் எ.அமிர்தலிங்கம், சிவகுரு வித்தியாசாலை அதிபர் த.தவேந்திரராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த இறுதியாட்டத்தில் காட்சிப் போட்டியாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும், வல்வை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. அதனைத் தொடர்ந்து இறுதியாட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட றோயல் விளையாட்டுக்கழகமும், சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் இறுதிச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றிய 24 கழகங்களுக்கும் பரிசில்கள் வழங்கவுள்ளதால் அனைத்துக் கழகத்தினரையும் சமுகம் தருமாறு வல்வை விளையாட்டுக் கழக போட்டிக் குழு தெரிவித்துள்ளது. (12)



சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி



றோயல் விளையாட்டுக்கழக அணி

# கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டம் இறுதிப்போட்டியில் சென். மேரிஸ் அணி

(தீருவில்)

கரும்புலிகள் நினைவாக வல்வை விளையாட்டுக் கழகம் நடாத்தி வரும் மின்னொளியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் நேற்று முன்தினம் தீருவில் மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணியும், சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதியது.

ஆட்டம் தொடங்கி முதல் அரைவாசி நேர ஆட்டத்தின் போது - இரு அணிகளும் சிறப்பாக ஆடிய போதும் பல்கலைக்கழக அணியினருக்கே அதிக கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் இருந்தன.

இதில் 11 ஆவது நிமிடத்திலும் 24 ஆவது நிமிடத்திலும் கிடைத்த வாய்ப்பினைப் பல்கலைக்கழக அணியின் வீரர்கள் சரியான முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

இதனால், இடைவேளைக்கு முன்னதாக இரு அணிகளும் கோல் எதையும் பெறாத நிலையிலிருந்தன.

இடைவேளையின் பின்னர் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் அபாரமாக ஆடியது. இதற்கு பல்கலைக் கழக அணியினரும் ஈடுகொடுத்து விளையாடினர். இதனால் இரு அணியுமே எந்தவித கோலையும் பெறாத நிலையில் ஆட்ட நேரம் முடிவடைந்தது.

இதனால் தண்டனை உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. முதலில் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் பந்தைத் தடுக்க பல்கலைக்கழக அணி பந்தை அடிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

பல்கலைக்கழக அணியின் முதல் வீரரால் அடிக்கப்பட்ட பந்து கோல் காப்பாளரின் கையிற்பட்டு, குறுக்குக் கம்பத்தின் உள் விளிம்பில் பட்டு வெளிச்சென்றது.

இதனால், நடுவர் கோல் என அதனைக் குறிப்பிட்டபோது அதனை ஏற்காது சென்மேரிஸ் விளையாட்டுக் கழக அணியினர் விளையாட மறுத்தனர். அதன்பின்னர் போட்டி ஒழுங்கமைப்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க விளையாட ஒப்புக் கொண்டனர்.

அதன் பின்னர் சென்மேரிஸ் வீரரினால் அடிக்கப்பட்ட பந்து கோலானது. அதன் பின்னர் பல்கலைக்கழக அணியாலும், சென். மேரிஸ் அணியாலும் ஒவ்வொரு கோல் அடிக்கப்பட்டது.

அதனையடுத்து பல்கலைக்கழக வீரர்களால் அடிக்கப்பட்ட பந்து வெளியில் சென்றும், சென்மேரிஸ் கோல் காப்பாளரால் தடுக்கப்பட்டும் இருந்தவேளை, சென்மேரிஸ் அணியால் ஒன்று கோலாகவும் அடுத்த பந்து வெளியாலும் சென்றது.

இதனால் இரு அணியின் 5 ஆவது வீரர்களும் அடிக்க வேண்டிய சந்தர்ப்பம் இருந்தது. அப்போது பல்கலைக்கழக அணியினர் கோல் கட்டாயமாக அடிக்க வேண்டிய நிலையில் இருந்தபோது, அந்த அணி வீரரால் கோல் அடிக்கப்பட்டது.

இந்த நிலையில் இரு அணிகளும் 3:3 என்ற சமநிலையில் காணப்பட - சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் கோல் அடித்தால் வெற்றி எனவும், தடுக்கப்பட்டால் சமம் என்ற நிலையிலும் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் பந்தை உதைத்த போது அந்தப் பந்து நேர்த்தியான முறையில் கோலாக அடிக்கப்பட்டது.

இதனால், சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம், பல்கலைக்கழக அணியை 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (12)

# வன்னியில் பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி மானியங்கள் ஆணைக்குழுவுடன் ஆராய்வு !

வன்னியில் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிப்பது குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தமிழ் உறுப்பினர் ஒருவருடன் கலந்தாலோசித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வளாகமாக வவுனியா பல்கலைக்கழகம் இருப்பதால், நேரடியாக நிதியுதவிகள் கிடைப்பதில்லை எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் - இதனைத் தீர்க்கும் வகையிலேயே ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

வவுனியா நீர்ப்பாசன விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச சந்திபபில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், செல்வம அடைக்கலநாதன் ஆகியோர் கலநதுகொண்டனர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய வன்னி மாவட்டங்களுக்குப் பொதுவான பல்கலைக்கழகமொன்று ஆரம்பிக்கப்படுவதிலுள்ள நடைமுறைச் சாத்தியப்பாடுகள் மற்றும் சிக்கல்கள் குறித்தும் இதில் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

வன்னியில் பல்கலைக்கழகமொன்று அமைக்கப்படுவதன் அவசியம் குறித்து, இலங்கையின் கல்வி அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவின் கவனத்துக்குக் கொண்டு வருவது எனவும் இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களின் போராட்டம் இன்னமும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் புலிகளால் மீட்டு ஒப்படைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியிலுள்ள வங்கியொன்றின் முன்னால் - அண்மையில் திருடப்பட்ட 1 லட்சத்து 4 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை, விடுதலைப் புலிகள் மீட்டு, உரியவர்களிடம் நேற்று முன்தினம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

யாழ்.நகர் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள செலான் வங்கிக்கு முன்னால் கடந்த மாதம் 4 ஆம் திகதி மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, உரிமையாளர் சென்று, மீள வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிள் உரிமையாளர் யாழ்.பொலிஸ் நிலையத்திலும், விடுதலைப் புலிகளிடமும் முறையிட்டிருந்தார்.

இந்தநிலையில், களவுபோன மோட்டார் சைக்கிளை விடுதலைப் புலிகள் நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் வைத்து மீட்டு உரியவரிடம் கையளித்தனர்.

# ஆனைக்கோட்டை பாடசாலைக்கு நிரந்தர அதிபர் நியமனம் இல்லை

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக நிரந்தர அதிபர் இல்லாமல் இயங்கி வருகின்றது.

நீண்டகாலமாக இங்கு சேவையாற்றி வந்த அதிபர் - மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டதை அடுத்து, இதுவரை இந்த இடத்துக்கு நிரந்தர அதிபர் நியமிக்கப்படவில்லை.

அத்துடன், இங்கு பணியாற்றிய ஆசிரியர்கள் சிலரையும் வேறு பாடசாலைகளுக்கு கல்வித் திணைக்களம் இடமாற்றம் செய்துள்ளதால், பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சி - குன்றி வருவதாகப் பெற்றோர் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகிறது. (100)

# தமிழீழ நீதிமன்றங்களில் இதுவரை
# 24 ஆயிரம் வழக்குகள் விசாரணை 4 பேருக்கு மரண தண்டனை விதிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ நீதிமன்றங்களினால் இது வரையில் 24 ஆயிரம் வழக்குகள் விசாரிக்கப்பட்டுத் தீர்வுகள் காணப்பட்டுள்ளதாக தமிழீழ நீதித்துறைப் பொறுப்பாளர் இளையதம்பி பரராஜசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன், இது வரையில் நான்கு பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி நீதித்துறை தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்தத் தகவல்களை வெளியிட்ட நீதித்துறை பொறுப்பாளர் பரா -தமிழீழ நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படுகின்ற சட்டங்கள், விடுதலைப் புலிகளால் இயற்றப்பட்டுள்ள அதே வேளை, இந்தச் சட்டங்கள் நீதிமன்றச் சட்டங்களை ஒத்தவை.

சிங்கள மக்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்போது, மொழிபெயர்ப்புச் சேவையும் இந்த நீதிமன்றங்களில் இடம்பெற்று வருகின்றது.

இந்த நீதிமன்றங்களில் வாதிடும் நீதியாளர்கள் நாளொன்றுக்கு ஆகக் கூடிய தொகையாக 200 ரூபாவை மட்டுமே அறவிடலாம் எனவும் நீதித்துறை கட்டுப்பாடு விதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பலாப்பழத்தின் விலையில் பாரிய வீழ்ச்சி

தென்மராட்சிப் பகுதியில் தற்போது பலாப்பழப் பருவ காலமாதலால், பலாப்பழ விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் தினமும் பெருமளவு பலாப்பழங்கள் வந்து குவிவதையும் அவதானிக்க முடிகின்றது.

பலாப்பழமொன்றை வெட்டி சந்தைக்குக் கொண்டு செல்லல், சந்தை வரி என்பவற்றைக் கொடுப்பதற்குரிய பணத்துக்குக்கூட பலாப்பழம் விற்கும் விலை போதாமல் இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதனால், சிலர் பலாப்பழங்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்லாது தமது வீடுகளில் ஆடு, மாடுகளுக்கு வெட்டி வைப்பதையும் காண முடிகின்றது.

(24)

# செம்பியன்பற்று பொது நூலகத்தை திறக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை

(வடமராட்சி)

செம்பியன்பற்றிலுள்ள பொது நூல்நிலையம் இன்னமும் இயங்காமை குறித்து, இந்தப் பிரதேசத்தின் கல்விச் சமூகம் கவலை தெரிவித்தனர்.

2000 ஆம் ஆண்டு இயங்கி வந்த இந்தப் பொதுநூல் நிலையத்தில் பெறுமதி மிக்க பல நூல்கள் இருந்தன. இந்தப் பிரதேசத்தின் உயர்தர வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள் இந்த நூல் நிலையத்தினால் பயனடைந்தார்கள்.

மீள்குடியேற்றம் நடைபெற்று மக்கள் முழுமையாகக் குடியேறியுள்ளனர். பாடசாலைகள் வினயமுடன் இயங்கி வருகின்றன. அரச அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

பருத்தித்துறை பிரதேச சபையுடன் தொடர்புடைய இந்த செம்பியன் பற்று பொது நூலகததை காலம் தாழ்த்தாமல் சொந்த இடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்தப் பிரதேச மககள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (122)

## மருதங்கேணி கோட்ட தமிழ்த்தினப் போட்டி

மருதங்கேணி கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக, கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தெரிவித்தார். (122)

# நயினாதீவில் திருத்தப்படாத வீதிகளால் போக்குவரத்து சிரமம்

நயினாதீவுப் பகுதியிலுள்ள வீடுகள் அனைத்தும் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதுடன், இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

பஸ் சேவை இடம்பெறும் விகாரை ஊடான பிரதான வீதி ஓரளவுக்கு சீராகவுள்ளபோதும், மக்கள் நடமாட்டம் கூடிய கணேசா வித்தியாலயம் வீதி, விநாயகர் வீதி, சந்தையடியிலிருந்து மகாவித்தியாலயம் ஊடான வீதி மற்றும் ஏனைய சிறுவீதிகள் என்பன மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.

இந்த வீதிகளை உரியமுறையில் திருத்தம் செய்வதற்கு சமபந்தப்பட்டவர்கள் அக்கறை எடுத்து, தங்களின் சீரான பயணத்துக்கு வழி சமைக்க வேண்டுமென நயினாதீவு மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருப்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (113)



நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்ட பல்கலைக்கழக துணைவேந்தர்களைப் படத்தில் காணலாம்.



நேற்று யாழ்.பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்த பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினைச் சேர்ந்த ஜீவன் கூலிற்கு எதிராக கட்டப்பட்டிருந்த சுலோகங்களைப் படத்தில் காணலாம்.

# கிளிநொச்சியில் இரு பாடசாலைகளில் காலை உணவு வழங்குவதற்கு திட்டம்

கிளிநொச்சி மாவட்டக் கல்விக் கோட்டத்தில் இந்த ஆண்டு மேலும் இரண்டு கல்விக் கோட்டங்களில் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக உலக உணவுத் திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்ற வருடம் பூநகரிக் கல்விக் கோட்டத்தில் இந்தத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு பளை, கண்டாவளை ஆகிய கல்விக் கோட்டங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி, சாவகச்சேரி, தெல்லிப்பளை, ஊர்காவற்துறை ஆகிய கல்விக் கோட்டங்களில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சிப் பாசறைகள் உலக உணவுத்திட்ட அதிகாரிகளினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்த மாத இறுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தரம் I தொடக்கம் தரம் 9 வரையின் சகல மாணவர்களும் காலை 10.00 மணிக்கு உணவு வழங்கப்படவுள்ளது.

(122)

## சமஸ்கிருத வகுப்புகள் ஆரம்பம்

சமஸ்கிருத இலக்கண சோதிட சைவ சித்தாந்த வகுப்புக்கள் இன்று காலை 10 மணிக்கு கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த வகுப்பை சிவாச்சாரிய பீடாதிபதி சிவஸ்ரீ க.நமசிவாயக் குருக்களும், உப பீடாதிபதி சிவஸ்ரீ ச.சட்டநாதக் குருக்களும் ஆரம்பித்து வைப்பர்.

# மாமுனை - கட்டைக்காடு வீதி புனரமைப்பதற்கு அனுமதி

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாமுனை- கட்டைக்காடு வீதி மீண்டும் புனரமைக்கப்படவுள்ளது.

இந்தவீதியைத் தொடர்ந்து புனரமைப்பதற்கு உலக உணவுத்திட்டத்தின் அனுமதி கிடைத்துள்ளதாக உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

19 கிலோ மீற்றர் நீளமுள்ள இந்த வீதி - மாமுனையிலிருந்து புனரமைக்கப்பட்டு வருகின்றது. களிமண்ணால் புனரமைக்கப்படும் வேலைகள் ஆழியவளையுடன் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த வீதியைப் புனரமைப்பதற்கு நிதியை நிகொட் நிறுவனமும், பயனாளிகளுக்குரிய கொடுப்பனவை உலக உணவுத்திட்டமும் பொறுப்பெடுத்து செய்து வருகின்றது.

(122)

# புங்குடுதீவு கடற்படை முகாம் பலப்படுத்தப்பட்டு வருகிறது

புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாம் பலப்படுத்தும் பணிகளும், அழகுபடுத்தும் பணிகளும் கடந்த சில வாரகாலமாக இடம்பெற்று வருகின்றது.

கடந்த யுத்தகாலங்களில் இருந்ததையும்விட, பல அடுக்குகள், தொடாகள் கொணட முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு வருவதுடன், கொங்றீற் தூண்களாலான காவலரண்களும் அமைக்கப்பட்டு வருகின்றது.

முன்னர் இருந்த முகாம் பிரதேசம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு, நாளாந்தம் பலப்படுத்தும் வேலைகள் இடம்பெற்று வருகின்றமை தீவுப்பகுதி மக்கள் மத்தியில் அச்சவுணர்வை ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (113)






# யூரோ கிண்ணத்தை கைப்பற்றுவது யாரோ?



சினேடின் ஷிடானே
“காலை வாரிய பந்து”

உலகக்கிண்ண கால்பந்துப் போட்டிக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய கால்பந்துத் தொடராக விளங்குவது ஐரோப்பிய நாடுகள் பங்கேற்கும் யூரோ கால்பந்துக் கிண்ணமாகும்.

1960 ஆம் ஆண்டு முதல் இந்தத் தொடர் நான்கு வருடத்திற்கு ஒரு தடவை நடைபெற்று வருகின்றது. இந்த வகையில் 12 ஆவது யூரோ கிண்ணப் போட்டிகள் இந்த முறை போர்த்துக்கலில் “உலகை கண்டுபிடித்த போர்த்துக்கல்” என்ற கருத்தியல் அடிப்படையில் ஆரம்பமானது. கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று இறுதி ஆட்டத்திற்கு வந்துவிட்டது, என்றாலும் கால் இறுதிப் போட்டிகள் பற்றிய ஆய்வு சுவைக்கு சுவை கூட்டுவதாக இருக்கும்.

முதலாவது காலிறுதிப் போட்டியில் போர்த்துக்கல்-இங்கிலாந்து அணிகள் மோதின. போர்த்துக்கல் அணி முதற் போட்டியில் கிரீஸ் அணியிடம் தோல்வி அடைந்தது. இவ்வாறு போர்த்துக்கல் தோற்பது, யூரோ கிண்ண உதை பந்தாட்ட வரலாற்றில்- தொடரை நடாத்தும் நாடு முதல் போட்டியில் தோல்வி கண்ட நான்காவது சந்தர்ப்பமாகும்.

இங்கிலாந்து அணியினர் பிரான்ஸுடன் தோல்வி அடைந்தாலும் கப்டன் பெக்கமுடன் அவருக்கு துணையாக மைக்கல் ஓவன், பிராங் லம்பார்ட் ஆகிய வீரர்களும் காணப்பட்டனர். அதற்குப் பிறகு குரோஷியா, மற்றும் சுவிற்சர்லாந்துடனான போட்டிகளில் தலா 2 கோல்கள் அடித்து 18 வயதான வேய்ன் ரூனியும் நட்சத்திர அந்தஸ்த்தைப் பெற்ற வீரர் ஆகிவிட்டார். அதனால் இந்தப் போட்டி மிகுந்த எதிர்பார்ப்பை தோற்றுவித்தது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் 1:1 என்ற சமநிலையில் இருந்தன. இதனால் கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. இதில் கோல்டன் கோலுக்குப் பதிலாக “சில்வர் கோல்” என்ற விதி பயன்படுத்தப்பட்டது. இதன்படி கூடுதல் நேரத்தில் எந்த அணி கோல்போட்டாலும் 15 நிமிடம் ஆடவேண்டும். 15 நிமிட முடிவில் எந்த அணிகோல் அடித்து முன்னணி பெறுகிறதோ அந்த அணி வெற்றி பெறும். இதில் சமநிலை இருந்தால் மீண்டும் 15 நிமிடம் கொடுக்கப்படும்.

இதன்படி மேலதிக நேரத்தின் 110 நிமிடத்தில் ரூய் கொஷ்டா போர்த்துக்கலை கோல் ஒன்று அடித்து முன்னிலைப் படுத்தினாலும் அது ஐந்து நிமிடம் வரையே நீடித்திருந்தது. அதற்குள் இங்கிலாந்து வீரர் பிராங் லம்பார்ட் கோல் ஒன்றை அடித்து இங்கிலாந்தை தோல்வியிலிருந்து தற்காலிகமாகக் காப்பாற்றினார். இதனால் ஆட்டம் 2:2 என்ற சமநிலையில் முடிந்ததால் பெனால்டி முறையில் 6:5 என்ற ரீதியில் போர்த்துக்கல் வெற்றி பெற்றது.

அடுத்த காலிறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியன் பிரான்ஸும், கிரீஸ் அணியும் விளையாடின. பிரான்ஸ் மிக இலகுவாக கிரீஸ் அணியை விழுத்திவிடும் எனப் பலரும் எதிர்வு கூறியிருந்தனர். ஷிடேன், தியரிஹென்றி போன்றவர்கள் ஆரம்பம் முதலே தாக்குதல் ஆட்டத்தில் இறங்கினர். அவற்றை கிரீஸ் அணியின் பிற்களத்தடுப்பு வீரர்கள் சிறப்பாக முறியடித்துவந்தனர்.

ஆட்டத்தின் 65 ஆவது நிமிடத்தில் கிரீஸ் அணியின் அஞ்சலோ சடரிக் தலையால் முட்டி ஒரு மிகத்திறமான கோல் ஒன்றைப் போட்டார்.

இந்த ஒரு கோலை மட்டும் அடித்து, இறுதிவரை அதைத் தக்கவைத்து வெற்றி பெற்றது கிரீஸ் அணி. யூரோ கிண்ண வரலாற்றி லேயே மிகமிக அதிர்ச்சிகரமான தோல்வியாக இது காணப்படுகின்றது.




மூன்றாவது காலிறுதி ஆட்டம் ஹொலன்ட்-சுவீடன் அணிகளுக்கிடையில் நடைபெற்றது. வீரர்களோ முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டதனால் “பிறீகிக்”, “கோணர்” வாய்ப்புகள் அதிகளவில் வழங்கப்பட்டன. ஆனால் இதை இரு அணிகளுமே சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறின.

ஆட்டம் முடியும்வரை இருஅணிகளுமே கோல்போடாததை அடுத்து கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. கூடுதல் நேரத்திலும் கோல் அடிக்கப்படாததால் டை-பிரேக்கர் மூலம் முடிவு நிர்ணயிக்கப்பட்டது.

டை- பிரேக்கர் முடிவில் 4:4 என்ற கணக்கில் மீண்டும் போட்டி சமநிலையை எட்டியது. பின்னர் ‘சடன்டெத்’ முறையில் முடிவு தீர்மானிக்கப் பட்டது. இதில் ஹொலன்டின் வெற்றிக் கோலை ரோபன் அடித்து அணியை அரையிறுதிக்குத் தகுதி பெறச்செய்தார்.

இறுதியாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் செக்குடியரசு, டென்மார்க் அணிகள் மோதின.

முதற்பாதியில் டென்மார்க்கின் கையே - மன்னிக்கவும் காலே, ஓங்கி இருந்தாலும் இருதரப்பாலும் கோல்போடஇயலவில்லை பிற்பாதி ஆட்டம் தொடங்கியதும் ஆட்டத்தின் 49ஆவது நிமிடத்தில் செக்குடியரசின் ஜான் கோலர் தலையால் முட்டி ஒரு கோலை அடித்தார். இந்த யூரோ தொடரில் அ(இ) டிக்கப்பட்ட அற்புதமான கோல் இது எனக் கருதப்படுகின்றது. அதன் பின்னர் மிலான்பரோஸ் இரண்டு கோல்களைத் தொடர்ந்து அடித்து அணியின் வெற்றியை உறுதிசெய்தார். இந்தத் தொடரில் இதுவரை 5 கோல்களை அடித்து இவர் முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் யூரோ கிண்ண அரையிறுதி ஆட்டங்களுக்கு போர்த்துக்கலும், கிரீஸும் முதன்முறையாகத் தகுதி பெற்றுள்ளன. இதில் சொந்த மண் என்பதாலும் அதன் பயிற்சியாளர் 2002 உலகக் கிண்ணத்தை பிரேசில் பெறக் காரணமாக இருந்ததாலும் போட்டியை நடத்தும் போர்த்துக்கல் அணியே கிண்ணத்தை வெல்லும் என்கிறார்கள் ஒரு சாரார்.

இந்த யூரோ 2004 கிண்ணத்தை போர்த்துக்கல் கைப்பற்றினால், முதற்போட்டியில் தோல்வி கண்ட பின் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்த ஒரேயொரு நாடு என்ற பெருமையை பெறும். இதேவேளை, இதுவரை ஒரு போட்டியிற் கூட தோற்காத செக்குடியரசே கிண்ணத்தைக் கைப்பற்றுமென இன்னொரு சாராரும் கருத்துக் கூறுகின்றனர். அவர்களின் மனவலிமை லீக் போட்டியில் ஹொலன்ட் அணியை வீழ்த்தியதன் மூலம் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. ஏனென்றால் அந்த போட்டியில் முதல் இரு கோல்களை ஹொலன்ட் அடித்தாலும் பிற்பாதி ஆட்டத்தில் மூன்று கோல்களை அடித்து அந்தப் போட்டியை வென்றமையேயாகும்.



லூயிஸ் ஃபிகோ
“கிண்ணம் எனக்கே எனக்கா”

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆர்ப் பாட்டமின்றி அரையிறுதிக்குத் தெரிவான கிரீஸ் அணி, காலிறுதிப் போட்டியில் முதன்நிலை அணியான பிரான்ஸை வீழ்த்தி யுள்ளதால், உளவியல் ரீதியல் அதன் மனோபலம் அதிகரித்துக் காணப்படும் என்பதில் ஐயமில்லை.

எது எப்படியோ யூரோ கிண்ணத்தை கைப்பற்றுவது யார் என்பதை அறிய இன்று இரவு மட்டும் நாம் பொறுத்துத்தான் ஆக வேண்டும்.

-விமலன்-

# சொல்லாதே செய்



முரளி
“உனக்கும் பங்கிருக்கும்”

கிரிக்கெட் ரசிகர் ஒருவர் பத்திரிகை ஒன்றிற்கு எழுதியுள்ள கடிதம் ஒன்று பலதரப்பாரையும் நன்கு சிந்திக்க வைக் கும் வகையில் அமைந்துள்ளது. முதலில் எந்தெந்த வகையில் வெள்ளை நிற மல்லாத வீரர்கள் ஓரங் கட்டப் படுகிறார்கள், என்பதை உதாரணங்களுடன் எடுத்துக் கூறுகிறார். தொடர்ந்து இவற்றிலிருந்து மீண்டு தலை நிமிர்ந்து நிற்பதற்கு என்ன வழிவகை என்றும் எடுத்துக் கூறுகிறார். வெள்ளை இனக் கிரிக்கெட் வீரர்களால் ICC யால் ஏற்படும் அவமானங் களுக்கு உதாரணங் களை இலங்கையின் அனுப வங்களில் இருந்து எடுத்துக் காட்டுகிறார். உதாரணத்திற்கு ஒன்றிரண்டைப் பார்க்க லாம். முரளிதரன் காலங்காலமாக வெள்ளை இன நடுவர்களால் பாதிக்கப்படுவது இதில் முக்கியமானது.

ஒரு நாள் போட்டிகளில் முதல் பதினைந்து ஓவர்களில் முப்பது முதல் நாற்பது வரையான ஓட்டங்கள் எடுப்பது வழமையாக இருந்த காலத்தில் - அந்த வழமைக்கு தலையடி கொடுத்து 90 ஓட்டங் கள் சில சமயம்நூறைத் தாண்டும் பணியை சனத்தும், றொமேஷ் களுவிதாரணவும் ஏற்படுத்திய போது இதனைச் சகித்துக் கொள்ள முடியாத இங்கிலாந்தும், அவுஸ்தி ரேலியாவும் ‘முப்பது யார்’ விதியை பதினைந்து ஓவர்களில் இருந்து பத்து ஓவர்களாக மாற்ற வேண்டும். என்று ICC ஐ நச்சரித்தமை, அண்மையில் பேல்சைத் தட்டிவிட்டு விக்கெட் பெற முனைந்த ஜஸ்ரின்லாங்கரின் அருவருப்பு நிறைந்த சம்பவம், இலங்கை இங்கிலாந்தை விட டெஸ்ட் தரத்தில் உச்சத்தில் இருந்த பொழுதே (1996-98) இலங்கை யுடன் மூன்று டெஸ்ட் தொடருக்குச் சம்மதிக்க மறுத்த திமிர், தற்போது டார்வின், கெயின்ஸ் ஆகிய ஆட்டத்துக்கு உதவாத மைதானங்களில் இலங்கை டெஸ்ட் போட்டி களுக்கு ஒதுக்கியிருப்பது என்று வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

எனவே, பட்சபாதம், அவமானங்களில் இருந்து விடுபட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்கிறார் அவர். அதாவது ICC க்கு இணையாக ஆசிய கிரிக்கெட் யூனியன் ஒன்றை (ACU) அமைக்கும் முயற்சியில் இலங்கை கிரிக்கெட் சபை முன்னோடியாகச் செயற்பட வேண்டும் என்கிறார் அவர். இந்த அமைப்பில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிம்பாவே, என்பனவும் மற்றும் கென்யா சிங்கப்பூர், மலேஷியா முதலிய நாடுகள் - பின்னால் கூறப்பட்டுள்ள நாடுகள் டெஸ்ட் அந்தஸ்துப் பெறும் வரை இணைக்கப்பட்ட நாடுகளாக இருக்கலாம் என்கிறார் அவர். மேற்கிந்தியத் தீவுகளையும் இந்த அமைப்பில் இணைத்துக் கொள்ள முடியும். தென்னாபிரிக்க அணி இன்னமும் தன்னை வெள்ளை அணி என்றே எண்ணுகிறது. இருந்தும் அவர்களையும் சேர்த்துக் கொள்ள முயற்சிக்கலாம் என்கிறார் அவர். வெள்ளை இனப்பட்ச பாதத்திலும், ஓரம் கட்டும் செயலுக்கும் -ICC க்கும் சமனான தனித்துவம் மிக்க இன்னொரு அமைப்பை ஏற்படுத்துவதே எமக்கு கௌரவத்துக்கான ஒரே வழி என்றார் அவர். அதன் பின்னர் தேவையாயின் சமமான இரண்டு கிரிக்கெட் சபைகளும் இணைந்து ஒரு பொது முடிவுக்கு வரலாம் என்கிறார்.

வெள்ளை இனத் திமிர்ப் போக்கை அவதானித்துக் கொண்டு வரும் பல்லாயிரக் கணக்கான ஆசிய ரசிகர்கள் - இந்தச் சிந்தனையுடன் ஒத்துப்போவார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. இது எப்போது செய்யப்படும் என்பது தான் விடை தெரியாத வினாவாக இருக்கப் போகிறது.

International Cricket Council
“பிரிவதும் இணைவதும் உங்கள் கையில்”

# மனதில் உறுதிவேண்டும்

இலங்கைக் கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவிற்குச் சென்று இறங்கி இருக்கிறது. இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடப் போகிறது. அவுஸ்ரேலியாவின் முதன்மையான கிரிக்கெட் மைதானங்களின் சிட்னி கிரிக்கெட் மைதானம் (SCG) மெல்வர்ணக் கிரிக்கெட் மைதானம் (MCG) மேற்கு அவுஸ்ரேலிய கிரிக்கெட் மைதானம் (WACA) அடிலெயிட் ஒவல் மற்றும், GABBA மைதானங்கள். ஆனால் இலங்கை தனது இரண்டு டெஸ்ட் போட்டிகளையும் விளையாடப் போது அவுஸ்ரேலியாவின் வட பாகத்தின் வரண்ட பகுதியில் அமைந்துள்ள அவ்வளவு ரசிகர் ஆதரவற்ற கெய்ன்ஸ் மற்றும் டார்வின் மைதானங்களில் தான். இந்த மைதானங்கள் இரண்டிலும் முதன் முறையாக பங்களா தேஷ் அணிதான் விளையாடி இருந்தது.

இப்பொழுது விமர்சகர்களின் வாதம் என்னவெனில் பிரபல்யமான மைதானங்களைப் தவிர்த்து வரண்ட பகுதியில் அமைந்துள்ள வளமற்ற மைதானங்களில் விளையாட இலங்கை அணி சம்மதித்து இருக்கக் கூடாதென்பது. இலங்கை எல்லாவற்றுக்கும் தலையாட்டும் பொம்மைகளாகவும் இளிச்சவாயர்கள் என்று அவுஸ்ரேலியர் நினைக்கும் படியும் நடந்திருக்கக் கூடாதென்று கண்டிக்கிறார் ஒரு விமர்சகர்.

இதற்கப்பால் இங்கிலாந்து அவுஸ்ரேலியா ஏன் மேற்கிந்திய தீவுகளின் கிரிக்கெட் சபைகள் கூட தமது தொடருக்கு முன் குறிப்பிட்ட நாட்டுக்கு தமது பிரதிநிதிகளை அனுப்பி அடிப்படை வசதிகள் அனைத்தும் எவ்வாறு இருக்கின்றன என்று ஆய்வு செய்கிறார்கள். குறைகள் இருப்பின் அவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றை நிவர்த்தி செய்யும்படி கேட்டுக் கொள்கிறார்கள்.

ஒரு முறை மாத்தறை உயன்வத்த மைதானத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிகாரிகள் தம் திருப்திக் கேற்ப தங்கும் அறைகள் போன்றவற்றில் பல மாற்றங்களை ஏற்படுத்த நிர்ப்பந்தித்தனர். அதில் வெற்றியும் கண்டனர்.

அண்மையில் இங்கிலாந்து அவுஸ்ரேலிய அணிகள் இலங்கை வந்திருந்த போது கூட, இங்கு வந்த அதிகாரிகள் தமது தேவைகள் எவை என்று எல்லாவற்றையும் எடுத்துக் காட்டி இருந்தார்கள். ஆனால், இலங்கை கிரிக்கெட் சபை இவ்வாறு நடவடிக்கைகள் எடுப்பதில்லை. அல்லது அப்படி நடவடிக்கை எடுக்கத் தயக்கமா என்று தெரியவில்லை என்கிறார் ஒரு விமர்சகர்.

கடந்த சில ஆண்டுக்கு முன் சிம்பாப்வே சென்றிருந்த போது இலங்கை அணி வீரர்களின் உடமைகள் அவர்களிடம் வந்து சேர்ந்தது, அவர்கள் சென்று இரண்டு நாட்களின் பின்பே, அதிலும் மகேல ஜெயவர்த்தனவின் பொதிகள் காணாமலே போய்விட்டன. (பின்னர் கிடைத்ததா என்ற விபரம் தெரியவில்லை) இதே போன்றதொரு சம்பவம் கடந்த வருடம் மேற்கிந்தியத் தீவுக்குச் செல்லும் போது நடைபெற்றிருந்து.

இரண்டு வருடங்களுக்கு முன் அவுஸ்ரேலியாவில் இலங்கை அணி சென்றிருந்த போது அவர்களை வரவேற்று உரிய இடத்துக்கு அழைத்துச் செல்ல அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையின் யாருமே விமானநிலையத்துக்கு வந்திருக்கவில்லை. இதனால்பல மணித்தியாலங்கள் விமான நிலையத்திலேயே அங்கும் இங்கும் அலைய வேண்டி இருந்தது. எனவே இப்படியான விடயங்களில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டியது இலங்கைக் கிரிக்கெட் சபையே, அல்லது அதிருப்திகளும் வளர்ந்துகொண்டே இருக்கும்.

ஒருமுறை இலங்கையில் தங்கியிருந்த இங்கிலாந்து அணியினர் - இரவு நடைபெற்ற தனிப்பட்ட நிகழ்வு விருந்தொன்று தமக்கு பெரும் DISTURB ஆக இருந்தது என்று முறையிட்டிருந்தார்கள். துரதிஷ்ட வசமாகத் தொடர்ந்து நடந்த டெஸ்ட் போட்டியில் தோல்வி கண்ட போது முதல் நாள் தமக்கேற்பட்ட அசௌகரியங்கள் தான் தோல்விக்குக் காரணம் என்று இலங்கைக் கிரிக்கெட் சபைமீதும், ஹோட்டல் மீதும் குற்றம் சாட்டினார்கள். எனவே முயற்சியுடையவன் தன்னை உணர்ந்தால் கௌரவத்தைப் பெற்றுக் கொள்கிறான். மற்றவர்கள், எல்லோருக்கும் எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பவர்கள். அவ்வளவுதான் வித்தியாசம்.



“பசுமையை ஏன் மறிக்கிறீர்கள்” -சிட்னி மைதானம்-

# நிலை தடுமாறும் நினைவுகள்

அண்மைக்காலமாக இந்தியக் கிரிக்கெட் அணி துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு என்பனவற்றில் முன்னேற்றமடைந்துள்ளது என்னவோ உண்மைதான். இதற்கு அந்த அணியில் இடம் பிடித்துள்ள இளம் வீரர்களின் துடிப்பான செயற்பாடுகளே காரணமென்று கூறினால் மிகையாகாது.

இந்த வகையில் அவுஸ்ரேலிய மண்ணில் நடந்த டெஸ்ட் போட்டியில் உலக முதன்மை அணியான அவுஸ்ரேலியாவை அச்சுறுத்தும் வகையிலான விளையாட்டு, பாகிஸ்தான் மண்ணில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களைக் கைப்பற்றியமை என்பன இந்திய அணியின் அண்மைக்கால வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

ஆனாலும் இந்த வெற்றிகளின் பின்னர் இந்திய அணித்தலைவர் கங்கூலியின் பொறுப்பற்றதனமான பேட்டிகளும் அவரது செயற்பாடுகளும் நன்றாக அமைந்ததாகத் தெரியவில்லை.

ஏனெனில் அண்மையில் அவர் அளித்த பேட்டியில் அவுஸ்ரேலிய அணிக்கு அடுத்ததாக, அதாவது அவுஸ்ரேலிய அணியை வெல்லக்கூடிய அணியாக இந்திய அணி வளர்ச்சியடைந்துள்ளதாகக் கூறினார். இது அவரது மிகைப்படுத்தப்பட்ட கூற்றென்றே கொள்ள வேண்டும்.

இதற்கு உதாரணமாக நடந்து முடிந்த உலகக் கிண்ணப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் அடிவாங்கிய இந்திய அணி, அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற வி.பி கிண்ண ஒருநாள் தொடரிலும் அடிவாங்கியதை இங்கே குறிப்பிடலாம்.

ஒரு சில போட்டிகளில் வென்றுவிட்டு நாம் பெரிய சாதனையைப் படைத்து விட்டோமென மார் தட்டிக்கூறுவது எவ்வளவு முட்டாள்த் தனமானதென்பதனை ஒரு தேசிய அணியின் தலைவரான கங்கூலி உணர்ந்தவர் போல் தெரியவில்லை.

இதில் றிக்கி பொண்டிங் என்ன சொல்கிறார் என்றால் - ஒரு போட்டியை மட்டும் வென்றுவிட்டு எமது அணியின் இடத்தைப் பிடித்ததாகக் கூறமுடியாது. அதற்கு இந்திய அணி கடுமையாக உழைத்து இன்னும் பல வெற்றிகளைப் பெறவேண்டுமென்கிறார். இது இந்தியத் தலைவருக்கு எப்படி உறைத்ததோ தெரியாது.




அடுத்து கங்கூலியால் எழுப்பப்பட்ட சர்ச்சை, நடைபெறவுள்ள ஆசிய கிண்ணத் தொடரில் தான் உட்பட ஷேவாக், சச்சின் மூவரில் இருவர் ஆரம்ப ஆட்டக்காரர்களாக களமிறங்குவோம் என்ற கருத்தால் உருவானது.

இவருக்கு ஏன் இந்த வீண் வம்பு. ஷேவாக், சச்சின் இருவரும் சிறப்பான அடித்தளத்தையே ஒருநாள் போட்டிகளில் இந்திய அணிக்கு வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் தானும் இணைவதாகக் கூறுவது எவ்வளவு அநாகரிகமான அவரது செயலைக் காட்டுகின்றது.

முன்னரும் ஒரு தடவை சச்சினின் ஆரம்ப இடத்தை தான் எடுத்துக்கொண்டு அவரை நான்காம் வீரராக களமிறக்கியவரும் இவரேதான் என்பதனையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இவரது அடுத்த சர்ச்சை இந்திய டெஸ்ட் அணியின் ஆரம்ப வீரர் பற்றியது. இவரது நிலைப்பாட்டின் படி ஒக்ரோபர் மாதம் இந்தியா வரவுள்ள அவுஸ்ரேலிய அணியுடனான போட்டியில் யுவராஜ் தான் ஆரம்ப வீரர் என்கிறார்.




இவரின் இந்தக் கருத்திற்கு சச்சின் ஷேவாக் போன்றோர் நியாயபூர்வமான எதிர்ப்புத் தெரிவித்துள்ளனா.

இதில் ஷேவாக் கூறும் கருத்தையும் ஏற்கத்தான் வேண்டும். அவர் கூறுகின்றார் நான் அதிரடி ஆட்டக்காரன். என்னுடன் இணைபவர் தற்காப்பு ஆட்டக்காரராகவே இருக்க வேண்டும். என்னைப் போல அதிரடியாக ஆடுபவர். ஆரம்ப 20 ஓவர்கள் தாக்குப்பிடிப்பார்களா, ஒரு ஓவரைத் தாக்குப் பிடிப்பாரா என்பதனை உறுதியாகக் கூறமுடியாது.

அந்த வகையில் சஞ்சய்பங்கர், ஆகாஷ் சோப்ரா இருவரும் தடுப்பு ஆட்டக்காரர்கள். இவர்கள் இருவரும் முதல் 15 அல்லது 20 ஒவர்கள் வரை தாக்குப்பிடிப்பார்கள் என்கிறார்.

ஷேவாக்கின் இந்தக் கருத்தின்படி யுவராஜ் அதிரடி ஆட்டக்காரரென்பதும், டெஸ்ட் போட்டியில் இவர் முதல் 20 ஓவர்களைத் தாக்குப்பிடிப்பதில் சிரமமடைவார் என்றும் மறைமுகமாகச் சொல்கிறார் அல்லவா?

ஆகாஷ் சோப்ரா என்ன சொல்கிறார் - அணியும் பயிற்றுவிப்பாளரும் எதைச் சொன்னார்களோ, அவர்கள் என்னிடம் எதைச் செய்தார்களோ அதனை நான் சரியாகவே செய்தேன்.

அதாவது - புதிய பந்துகளை எதிர்கொண்டு நீண்டநேரம் விக்கெட் விழாமல் மைதானத்தில் விளையாடவேண்டுமென்றார்கள் அதனை நான் செய்தேன் என்கிறார்.

ஆகாஷ் சோப்ராவை இணைத்து இந்திய அணி விளையாடிய டெஸ்ட் போட்டிகளில் அவர் மோசமாக விளையாடியதாகத் தெரியவில்லை. அவரது சராசரி 40 ஓட்டங்களுக்கு மேல்தான் இருந்துள்ளது.

இந்தநிலையில் பாகிஸ்தான் தொடரில் கங்கூலி காயமடைந்த நிலையில் அவரது இடத்திற்கு யுவராஜ் மத்திய வரிசை வீரராகக் களமிறக்கப்பட்டு சிறப்பாகவே விளையாடினார்.

ஆனாலும் டெஸ்ட் போட்டித் தொடர்களில் அதிக அனுபவம் இல்லாத யுவராஜை ஒக்ரோபர் மாதம் இந்தியா வரவுள்ள அவுஸ்ரேலிய அணிக்கெதிராக ஆரம்ப வீரராக களமிறக்குவது சரியா என்பதே தற்போதுள்ள கேள்வியாகும்.

இவ்வாறு யுவராஜை ஆரம்பவீரராக களமிறக்க கங்கூலி ஆசைப்படுவதன் உள்நோக்கம் என்ன என்பது புரியாத புதிராகவே உள்ளது.

முன்னர் சிறப்பாக விளையாடி இந்திய அணியின் அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தில் அழைத்துச் செல்லப்பட்டு ஒரு டெஸ்ட் போட்டியிலும் விளையாட இடம் கொடுக்காத சடகோபன் ரமேஷ், சிவ்சுந்தர்தாஸ், சஞ்சய் பங்கர் போன்ற அனுபவமான வீரர்களை இணைத்து, அவர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்க கங்கூலி ஏன் முன்வரவில்லை?

இவ்வாறான நிலைமையில் தற்போது ஆகாஷ் சோப்ரா யுவராஜ் இவர்களில் யாரை கங்கூலி பலிக்கடா ஆக்கப் போகின்றார்.

அதற்கு விடைகாண ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள இந்திய - அவுஸ்ரேலிய தொடர் நிறைவடைய வேண்டும்.

- யசோ.

வரலாறு பகுதி - IV மறவன்புலவு - க.சச்சிதானந்தன்



# தமிழரிடமிருந்து நிலங்களை கைப்பற்ற சிங்களவர் திட்டமிட்டு வருகின்றனர்

## ஈழத்தமிழர் மரபு வழித் தாயகப் பிரதேசங்களை சிங்களவர் அபகரித்த வரலாறு

### கிடுக்கி வளைப்பு

திருகோணமலையைச் சுற்றி ஒரு கிடுக்கியாக, குதிரைலாடமாக, சிங்களக் குடியேற்றங்களை அரசு அமைத்தது.

1976 ஆம் ஆண்டில் இந்தக் குதிரைலாட வடிவப் பிரதேசம் தனித் தேர்தல் தொகுதியாகியது. சேருவல எனச் சிங்களப் பெயர் பெற்றுச் சிங்கள உறுப்பினர் மட்டுமே தெரிவாக ஏற்பட்டது.

### முசலி ~ மணலாறு

எழுபதிகளில், அரசு வடமாகாணத்திலும் சிங்களக் குடியேற்றங்களைத் திட்டமிட்டது.

மன்னார் மாவட்டத்தின் தெற்கே முசலி தோட்டச் செய்கைக்கென அரச நிறுவனம் அமைத்து, காடுகள் வெட்டி சிங்களவர் பல்லாயிரக்கணக்கில் குடியேறினர்.

வவுனியா மாவட்டத்தில், முல்லைத்தீவுக் கரையோரத்தில், நாயாற்றுக் கடனீரேரியருகில் வந்து விழுவது மணல் ஆறு. இதன் பெயரை வெலி ஓயா என அரசு மாற்றியது. அங்கிருந்த காடுகளைச் சேனையாக்கி, கமங்களாக்கி, சிங்களச் சிறைக் கைதிகளைக் கொண்டு வந்து குடும்பங்களுடன் குடியேற்றியது.

### மீனவர் குடியேற்றம்

சிங்கள மீனவர் தென் மகாணங்களில் இருந்து இடம்பெயர்ந்து - கிழக்குக் கரைப்பகுதிகளை ஆக்கிரமிக்க, அந்த ஆக்கிரமிப்புகளுக்கு அரசு சட்ட வடிவு கொடுத்தது.

தீவின் கரையோரத்தில், சிங்கள நிலப்பகுதிக்குரிய கரையில், ஆழ்கடற் பகுதி மட்டுமே உண்டு. வாய்க் கால், ஆற்றுக்குத் தெற்கே காலி ஊடாக மாணிக்க கங்கை வரை கரையில் இருந்து கடலுள் இறங்கி னால் திடீரென ஆழமாகும்.

**நூற்று அறுபத்து இரண்டு ஆண்டுகளில் (1833- 1995) இலங்கைத்தீவில் தமிழரின் மரபு வழித்தாயகத்தில் 50 வீதமான நிலப்பகுதியைச் சிங்களவர் படிப படியாகக் கையகப்படுத்தி வந்துள்ளனர். தொடர்ந்து மேலும் - புதிய நிலங்களைத் தமிழரிடம் இருந்து கையகப்படுத்த (எடுத்துக்காட்டு மதுறு ஓயாத்திட்டம்) திட்டமிட்டு வருகினறனர்.**

200 இற்கு மேற்பட்ட பாகங்கள் ஆழமாகும்.

தமிழர் நிலப்பகுதிக் கரையோரத்தில் கடனீரேரிகள் பல உள்ளன. கடலும் படிப்படியாகவே ஆழமாகிச் செல்லும். கரையிலிருந்து சில கி.மீற்றர் தூரத்துக்கு அப்பால் தான் 200 பாகத்துக்கு மேல் ஆழங்கள் அதிகரிக்கும். திருகோணமலைப் பகுதியில் மட்டுமே ஆழம், உடன் அதிகரிக்கும்.

வாடைக்காற்றுக் காலம் (ஐப்பசி - மார்கழி) தவிர ஏனைய மாதங்கள் முழுவதும் தமிழரின் நெய்தல் நிலம் தொழிலுக்குரிய தாய் அமையும்.

இந்தக்காலங்களில் மேற்கே முசலி, சிலாபத்துறை, தலைமன்னார் பகுதிகளுக்கும் கிழக்கே- நாயாற்றிலிருந்து கல்முனை வரை நீண்ட கடற்கரைக்கும் சிங்கள மீனவர் இடம்பெயர்வர். தொடக்கத்தில் தமிழ் மீனவர்களுடன் சேர்ந்து தொழில் செய்த இவர்கள் படிப்படியாக தமிழரை அந்த இடங்களிலிருந்து விரட்டத் தொடங்கினர்.

நாயாறு, கொக்கிளாய், குச்சவெளி, திருகோணமலை நகரம், இலக்கந்தை, வெருகல், பனிச்சன் கேணி, மாங்கேணி, புன்னைக் குடா, ஏறாவூர், மட்டக்களப்பு, சின்ன முகத்து வாரம், கோமாரி, திருக்கோவில் ஆகிய பகுதிகளில் இடம்பெயர் சிங்கள மீனவர் காலப் போக்கில் அங்கிருந்த தமிழ் மீனவர்களை விரட்டமுயன்றனர்.

இடம் பெயர் சிங்கள மீனவர்களுக்கு அரசு ஆதரவளித்தது. வசதிகள் செய்தது. குடியமர் சட்டக் கட்டமைப்புச் செய்தது.

### ஐந்து முனை ஊடுருவல்

**அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் ஐந்து முனைகளில் அமைந்தது.**

**பட்டிப்பளை, ஆற்று வழி, அம்பாறை முதல் குமணை ஈறாக முதல் முனை.**

**அல்லை - கந்தளாய் - சேருவிலை இரண்டாவது முனை.**

**பதவியா - மணலாறு மூன்றாவது முனை.**

**வில்பத்து - முசலி நான்கா வது முனை.**

**மீனவர் ஆக்கிரமிப்புக்கள் ஐந்தாவது முனை.**

### படிப்படியான பரப்புக் குறைவு

1833 ஆம் ஆண்டில் கோல்புறூக் - கமரோன் மாகாண எல்லை வகுப்புக் காலத்தில் ஏறத்தாழ 26,500 சதுர கிலோமீற்றர் பரப்பளவு நிலம் தமிழர் மரபு வழித்தாயகமாயிற்று.

1901 ஆம் ஆண்டில் ஒன்பது மாகாணங்கள் அமைந்ததும், தமிழர் ஆட்சிப் பகுதியான வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் ஏறத்தாழ 19,100 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டிருந்தன. முத்துச்சலாப வன்னிமையும், தம்பன் கடவையும் தமிழர் நிலப் பகுதியாக இருந்தமை, சிங்கள ஆட்சிப்பிரிவுக்குள் சேர்க்கப் பட்டதால், ஏறத்தாழ 7,500 சதுர மைல் கிலோமீற்றர் பரப்பளவு குறைந்தது.

1948 ஆம் ஆண்டிற்குப் பின் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தில் கிழக்கு மாகாணத் தில் ஏறத்தாழ 7000 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும், வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 500 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும், தமிழர் எதிர்ப்பையும் மீறி கொழும்பு அரசு சிங்களக் குடியேற்றவாசிகளிடம் கொடுததுள்ளது.

இவ்வாறு கடந்த 40 ஆண்டுகளில் சிங்களவர் கையகப்படுத்திய, ஏறத்தாழ 7,500 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் சிங்கள ஆட்சிப் பிரிவுகளுடன் சேர்த்துக் கொள்வது தான் அண்மையில் வெளியிடப்பெற்ற மாகாண எல்லை மீள்வரைவுக் கருத்துரையின் நோக்கமாகும்.

1833 ஆம் ஆண்டிற்கு முன்னர், 25 வீதமான தமிழ்மொழி இனம் தீவின் நிலப்பரப்பில் 35 வீதமான பரப்பளவைத் தம் மரபுவழித் தாயகமாகக் கொண்டு, ஆட்சி எல்லைக்குள் வைத்திருந்தது.

1901ஆம் ஆண்டில் இந்த நிலப்பரப்பு 35 வீதத்தில் இருந்து 29 வீதமாகக் குறைந்தது.

1995ஆம் ஆண்டில், அதே 25 வீதமான தமிழ்மொழி இனத் திடம் தீவின் 17வீதமான நிலப் பரப்பை மட்டும் தமிழ்மொழி இனத்தின் ஆட்சி எல்லைக்குள் வைத்திருக்க, தமிழ்மொழி இனத்தின் சட்ட ஒப்புதல் பெற, மாகாண எல்லை மீள்வரைவுக் கருத்துரைகள் முன்வந்துள்ளன.

நூற்று அறுபத்து இரண்டு ஆண்டுகளில் (1833- 1995) இலங்கைத் தீவில் தமிழரின் மரபு வழித்தாயகத்தில் 50 வீதமான நிலப்பகுதியைச் சிங்களவர் படிப்படியாகக் கையகப் படுத்தி வந்துள்ளனர். தொடர்ந்து மேலும் - புதிய நிலங்களைத் தமிழரிடமிருந்து கையகப்பட்ட (எடுத்துக்காட்டு மதுறு ஓயாத்திட்டம்) திட்டமிட்டு வருகின்றனர்.

(முற்றும்)

---

செய்திக் கட்டுரை திரு.த.திரு

# ஊர்காவற்துறை போக்குவரத்து சீர்செய்யப்பட வேண்டியுள்ளது

யாழ்ப்பாணம் - அனலைதீவு, எழுவைதீவு மீனவர்கள் தாம் பிடிக்கும் கடல் உணவை உரியவேளையில் சந்தைப்படுத்த முடியாததால், உரிய வருமானத்தைப் பெறமுடியாதுள்ளனர்.



ஊர்காவற்றுறை இறங்குதுறை கடற்படை பிடியில், அந்திய இழுவைப்படகுகள் கட்டிவிடப்பட்டிருக்கின்றன.

இவர்களுக்கான பிரதான சந்தைப்படுத்தும் நிலையமான ஊர்காவற்றுறை இறங்குதுறை -கடற்படையினரின் பிடியிலிருப்பது இதற்கு முதன்மைக் காரணமாகும்.

1990 இற்கு முன்னர் எழுவைதீவு, அனலைதீவு மீனவர்களின் சந்தையாக காரைநகர் - நீலங்காடும், ஊர்காவற்றுறையும் இருந்தன. இந்தத் தீவுகளுக்கான போக்குவரவுப் படகுகளின் இறங்குதுறையாக ஊர்காவற்றுறை இருந்த காரணத்தினால், அது பொலிவு பெற்ற சந்தையாக இருந்து வந்தது.

1990 ஆம் ஆண்டு இராணுவத்தினரின் ஆதிக்கத்தால் ஊர்காவற்றுறை வெறிச்சோடியது. மக்களற்ற நகரமானது. 1990 ஜுன் முதல் 1991 நடுப்பகுதி வரை அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இந்தத் தீவுகளின் மக்கள் - இரவுவேளைகளில் ஊர்காவற்றுறையின் சுருவில் ஐயனார் கோயிலடிக்குச் சென்றுதான் தம் வெளித்தொடர்புகளை வைத்திருந்தனர்.

இப்படிப் போக்குவரவில் ஈடுபட்ட சாந்தா அல்லது விடிவெள்ளி படகு மீது படையினர் நடத்திய தாக்குதலில் 22 அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1991 ஒக்ரோபரில் தீவகம் முழுமையாகப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. இந்தத் தீவு மக்கள் குறிகட்டுவானுடன் தொடர்பு



கொள்ள கடற்படையினரால் வைக்கப் பட்டனர்.

1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் முழுமையும் படையினரால் பிடிக்கப்பட, தீவகத்துக்கான பண்ணைப் பாலம் வீதி திறக்கப்பட்டது.

ஆனாலும், மீன்பிடியில் மிகுந்த கட்டுப்பாடு இருந்தது. இதனால் பெருமளவிலான சந்தைப்படுத்தும் அளவு கடலுணவு எழுவைதீவு, அனலைதீவு ஆகியவற்றில் பிடிக்கப்படவில்லை.

ஆனால், போர்நிறுத்த உடன்பாட்டின் பின்னர் எழுவைதீவில் மீன்படி அதிகமானது. அனலைதீவில் பெரிய அளவில் மீன்பிடித் தொழில் இல்லை. ஆனால் எழுவைதீவு - அதற்கெதிரான மெலிஞ்சிமுனைத்துறையில் மிக அதிகளவில் மீன்பிடித் தொழில் நடக்கிறது.

தரைத்தொடர்பு காரணமாக மெலிஞ்சிமுனை மீனவர்கள் தாம் பிடித்த கடலுணவை வேளைக்கு சந்தைப்படுத்தகின்றனர்.

எழுவைதீவு மீனவர்கள் கரம்பொன் கண்ணகை அம்மன் கோயிலடித்துறைக்கு கொண்டு சென்று, அங்கிருந்து ஊர்காவற்றுறை அல்லது யாழ்ப்பாணம் கொண்டு செல்ல வேண்டும்.

இந்த போக்குவரவு நேர அதிகரிப்பால் - அந்த மீனவர்கள் குறைந்த விலைக்கே அவற்றைச் சந்தைப் படுத்துகின்றனர். இதற்குப் பிரதான காரணம் ஊர்காவற்றுறை இறங்குதுறை கடற்படையினால் தடைசெய்யப்பட்டுள்ளதாகும்.

காரைநகர் கடற்படைத் தளத்துக்காக ஊர்காவற்றுறை முதல் - கடற்கோட்டை வரையான கடல் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு அங்கு படகுகள் நுழைய சிறிலங்கா கடற்படை தடைவிதித்துள்ளது. இதனால்தான் இன்றுவரை ஊர்காவற்றுறை நகர் இறந்த நகராகவே உள்ளது.

ஊர்காவற்றுறை இறங்குதுறை இப்பொழுது படையினரின் பிடியில் இருக்கிறது. கடற்படையினர் காரை நகருக்கான படகுப்பாதையை மட்டும் அனுமதிக்கின்றனர். கடற்படையினரால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் மட்டுமே அங்கு கட்டப்பட்டுள்ளன.

எழுவைதீவில் இப்போது 135 மீன்பிடிப்படகுகள் மற்றும் கட்டு மரங்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளன. வளம்மிகு இக்கடலில் அதிகளவில் இம் மீனவர்களால் பிடிக்கப்படும் கடலுணவு வகைகளுக்குரிய சந்தை வாய்ப்பு கிடைக்காததால், உரிய வருமானத்தைப் பெற முடியாதுள்ளனர்.

1990 இற்கு முன் இவர்கள் அதிகளவில் கருவாடு உற்பத்தியைச் செய்தனர். இப்போது அதற்குரிய வாய்ப்புக்கள் இல்லை. கடற்படையினரின் கட்டுப்பாடு தொடர்ந்து இருக்கின்றது.

தீவின் தெற்கு - மேற்கு, வடக்கு ஆகிய மூன்று இடங்களில் மட்டும் படகுகளைக் கட்ட படையினர் அனுமதிக்கின்றனர்.

கண்ணகை அம்மன் கோயில் துறையிலிருந்து ஒரு நாளைக்கு எழுவைதீவுக்கு இரண்டு தடவையே பயணிகள் படகுச் சேவை உண்டு. காலையில் போய்வரும் ஒரு சேவையும். மாலையில் போய் வரும் ஒரு சேவையும் நடக்கின்றது. இத்தீவு வாசி ஒருவரிடம் இருக்கிறது.

இழுவைப் படகு இரவில் மீன்பிடி இழுவைப்படகாகவும். பகலில் போக்குவரவுப் படகாகவும் இயங்குகின்றது. கியூடெக்கின் ஒரு பயணிகள் படகு இறங்கு துறையில் கட்டி வைக்கப் பட்டாலும் அது பயணிகள் போக்குவரவில் ஈடுபடுவதில்லை.

1990 இடப்பெயர்வுடன் தீவின் வடபகுதி மக்கள் இடம்பெயர்ந்து விட்டனர். தென்பகுதி மக்கள் மட்டுமே அதிகம் வாழ்கின்றனர்.

167 குடும்பங்களில் 665 பேர் இத்தீவின் மக்களாவர். 12 குடும்பங்கள் தான் மீள்குடியமர்ந்துள்ளன. 02 பாடசாலைகள் இருக்கின்றன.

ஆனால் தரம் பத்து வரை உள்ள முருகவேல் வித்தியாலையத்தில் 30 மாணவர்களே உள்ளனர். 5 ஆம் தரம் வரை உள்ள றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் 69 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இத்தீவின் இறங்குதுறை கடற்படையிடம் உள்ளது. தீவுக்கு சொந்தமானோர் இல்லாதோர் தீவு முகவரி அடையாள அட்டை இல்லாதோர் நுழைவதானால் தாம் செல்பவரின் முகவரி பதியப்பட்டு அடையாள அட்டை கடற்படையிடம் கொடுத்துச் செல்லவேண்டும்.

மீன்பிடியுடன், பனைவளம் நிறைந்த இத்தீவில் பெட்டி, கடகம், பாய் இழைத்தல் முக்கிய தொழிற்துறையாக இருந்தபோதும் இப்பொழுது அது நலிந்து போய்விட்டது. குடி நீருக்கு இங்கு தட்டுப்பாடு உள்ளது. எழுவைதீவின் நடுப்பகுதியில் ஒரு கிணறு நன்னீருக்குரியதாக விருத்தி செய்யப்பட்டபோதும் அது குடிப்பதற்குரிய நீர் இல்லை.

தென்பகுதியில் கடற்கரை ஓரம் மணலில் பூவல் தோண்டி நன்னீரை மக்கள் அவசர தேவைக்காக பெறுகின்றனர். மற்றும்படி ஊர்காவற்றுறை பிரதேசசபை படகு ஒன்று மூலமே குடிநீரை இத் தீவுக்கு அனுப்புகிறது.

இப்படியாக எழுவைதீவு குடித்தொகை அடிப்படை சவால்களிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறது.

எழுவைதீவு பொலிவுற - ஊர்காவற்றுறை போக்குவரவு திறக்கப்பட வேண்டும். அப்போதே சிறந்த ஊர் காவற்றுறையும் பொலிவுறும்.

பொதுசன நூலகம்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு*
*மாடுஅல்ல மற்றை அவை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியின் நிலைப்பாட்டினை நிராகரித்து ஒதுக்கும் ஜே.வி.பி.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக எப்போதுமே உறுதியற்றதும், நேர்மையற்றதும், ஏமாற்றும் தந்திரோபாயங்களின் அடிப்படையிலானதுமான ஜனாதிபதியின் நிலைப்பாட்டின் உண்மைத்தன்மையானது அவர் எவ்வளவுதான் வார்த்தை ஜாலம் காட்டினாலும், எப்படியாவது வெளியாகிவிடுவது வழக்கம்.

இந்தமுறை அவரது சமாதான நாடகம் அரங்கேகற்றமாகுமுன்பே அதன் உள்விடயங்கள் அனைத்தும் அம்பலத்திற்கு வந்துவிடும் நிலை உருவாகிவருவது, மற்றொரு தடவை சமாதானத்தின் பேரால் தமிழ் மக்களும், சர்வதேச சமூகம் ஏமாற்றத்திற்குள்ளாகும் அவலம் ஏற்படாத வகையில் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய உணர்வை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

கடந்த வாரத்தில் ஜனாதிபதி, தான் முன்னர் கொண்டிருந்த நிலைப்பாட்டிலிருந்து கொஞ்சம் மாற்றம் ஏற்பட்டவராகி- அதாவது இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்த விடயத்துடன் இறுதித்தீர்வு குறித்த விடயத்தையும் ஏககாலத்தில் பேசவேண்டும் என்ற சாத்தியமற்றதும், யதார்த்தத்திற்குப் புறம்பானதுமான தனது ஆரம்ப நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வந்தவராகி- முதலில் இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்துப் பேசலாம் என்ற தனது எண்ணத்தை வெளியிட்டபோது, சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான ஆரம்பத் தடைகளில் ஒன்று ஒருவாறு நீங்கிவிடுவதற்கான சாத்தியம் தென்பட்டது.

ஜனாதிபதியின் அந்தப் புதிய நிலைப்பாடு குறித்து, அவர் தனது தோழமைக்கட்சிகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுத்தாரா அல்லது தன்னிச்சையாக-சுயாதீனமாக முடிவெடுத்தாரா என்பது தெரியாது. ஆனாலும் அரசின் தலைவி என்ற வகையிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற தகுதியிலும், பேச்சுவார்த்தைகள் தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் வலுக்கொண்டவர் என்ற கோதாவிலும் அவரால் வெளியிடப்பட்ட அந்தத் தீர்மானம் அரசினது முடிவாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையை சமாதான ஆர்வலர்களுக்கு ஏற்படுத்தியது எனலாம்.

ஆனால், ஜனாதிபதியின் புதிய நிலைப்பாடு குறித்த அறிவிப்பு வெளியாகி ஒருவாரம் முடிவதற்குள் அவரது கூட்டுக்கட்சியினரிடமிருந்தே அதற்கு எதிரான கருத்துக்கள் காட்டமாக வெளிவரத் தொடங்கியுள்ளமையானது அவருக்கு சிக்கலை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

ஏற்கனவே கருணா விவகாரத்தினாலும்- அதில் அரச படைக்குள்ள தொடர்புகள் காரணத்தால்- சமாதான முன்னெடுப்புக்களை கேள்விக்குறியாக்கி வைத்துள்ள அரசும், ஜனாதிபதியும், அந்தப் பிரச்சனைக்குள் இருந்துவிடுபட்டு தமது சமாதான முயற்சிகள் மீதான நேர்மை குறித்த நம்பகத்தன்மையை விடுதலைப்புலிகளுக்கும் ஏனைய சமாதான ஆர்வலர்களுக்கும் ஏற்படுத்தப்படாத பாடுபட்டுவரும் நிலையில் இப்போதைய புதிய நெருக்கடி உருவாகியுள்ளது.

புதிய அரசின் தலையெழுத்தை எழுதவல்ல சக்தியாகத் தன்னை வலுவான நிலையில் வைத்துள்ளதுடன் அரசைத் தன்னிஷ்டப்படி, தனது அரசியல் அபிலாஷைகளுக்கேற்றபடி வழிநடத்த ஜனாதிபதியின் கையறுநிலையையும், அரசின் பலவீன நிலையையும் பயன்படுத்த முனைப்புக் கொண்டுள்ள ஜே.வி.பி எப்போதுமே சமாதானத்திற்கு முற்றிலும் எதிரான தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்குவதாக இல்லை.

இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி இன்னமும் முடிவு செய்யவில்லை என்று ஜனாதிபதியின் கூற்றை அடியோடு நிராகரித்திருக்கும் ஜே.வி.பியின் முக்கியஸ்தரும், செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரில்வின் சில்வா அது குறித்துப் பேச அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் கூறியதன் மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தையே அர்த்தமற்ற விடயமாக ஒதுக்கியுள்ளார்.

இடைக்கால நிர்வாகம் குறித்து விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு அரசுக்கே எந்தவித அதிகாரமும் கிடையாது, எனத் தெரிவித்துள்ள அவர் இது குறித்த செய்திகள் எதுவும் ஜனாதிபதியினதோ, ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியினதோ உத்தியோகபூர்வ அறிக்கைகளின் அடிப்படையில் வெளியானவையல்ல என்றும் கூறியுள்ளார்.

இந்த வகையில் சமாதானம் தொடர்பான முன்னெடுப்பு விடயங்களில் தீர்மானமெடுப்பது அரசா, ஜே.வி.பியா அல்லது ஜனாதிபதியா என்பது சமாதான ஏற்பாளர்களால் உறுதி செய்ய வேண்டிய நிலை இப்போது உருவாகியுள்ளது.

தானே தீர்மானமெடுக்கும் சக்தி என்றால் அதனை ஜனாதிபதி வெளிப்படையாக உறுதிபடத் தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமல்ல அவரது தீர்மானத்திற்கோ, முடிவுக்கோ அரசோ அல்லது அவரது தோழமைக்கட்சிகளோ எதிர்ப்புத் தெரிவிக்காமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

ஜனாதிபதியினால் இதற்கான தெளிவான உறுதிப்பாடான பதிலொன்றை வழங்கும் நேர்மையும் துணிச்சலும் தற்போதைய அவரது நிலைமையில் இருக்குமா என்பது கேள்விக்குறியே.

ஏனென்றால் ஜே.வி.பியினரை எதிர்த்தோ அல்லது அவர்களுடன் முரண்பட்டுக்கொண்டோ ஜனாதிபதி எதனையும் சமாதானம் தொடர்பாக தீர்மானித்து முடிவெடுக்கும் மன ஓர்மத்துடன் இல்லை என்றே தோன்றுகின்றது.

இந்த நிலையில் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாட்டைவிடவும் ஜே.வி.பி யின் நிலைப்பாடு என்ன என்பதையே இப்போது கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

ஏனென்றால் ஜனாதிபதியின் சமாதானம் தொடர்பான முடிவுகள் ஜே.வி.பி யின் அபிலாஷைகளுடன் இணைந்து வராதவை. அதனை நடைமுறைப்படுத்தமுனையும் எந்த முயற்சியும் ஜனாதிபதிக்கு கடினமானதாக மட்டுமல்ல, ஆபத்தானதாகவும் இருக்கும் என்பதே இன்றைய அரசியல் யதார்த்தம்.

இன்று இலங்கையை நிர்வகிப்பது பலவீனமான அரசும் பலவீனமான ஜனாதிபதியுமே!

# நாடும் நடப்பும்




தெற்குத் திசையினிலே... — இந்திரஜித்

# சமாதான நகர்வில் பாதிப்பை ஏற்படுத்தும்; கொழும்பில் அதிகரிக்கும் அரசியல் நெருக்கடி



அரசாங்கம் - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துகின்ற முனைப்புகளை நகர்த்தமுடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளது.

தமது கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் உடனடியாக தமிழீழ வீடுதலைப புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டார்.

ஆனால் அந்த உடனடி முனைப்புகள் அனைத்தும் இன்று கிடப்பில் கிடத்தப்படும் நிலைக்குச் சென்றுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் எப்போதெல்லாம் சமாதான பேச்சுவார்த்தைகளை அரசு நடத்துகிறதோ, அப்போதெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நம்பிக்கையை வீணடிக்கும் வகையிலேயே நடந்துகொள்கிறது. இது அடுத்த கட்ட பேச்சுவார்ததைக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இவ்வாறான அரசாங்கத்தின் செயற்பாடுகளே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையை ஏற்படுத்தும் முகமாக மூன்றாம் தரப்பை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்தும் நிலையை உருவாக்கியது. எனினும் இந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தாலும் இன்று பிரச்சினைகளைக் கையாளமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் தமிழீழ விடு தலைப் புலிகளை வலுவிழக்க செய்யும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டபோதும் அதில் தோல்வி கண்டமையினால் தற்சமயம் விடுதலைப் புலிகளின் முன்னால் கட்டுண்ட நிலைக்கு சென்றுள்ளது.

முன்னர் கருணாவுக்கு இலங்கை இராணுவம் உதவியளிக்கவில்லை என இலங்கை இராணுவம் தெரிவித்து வந்தபோதும் பின்னர் தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கை இராணுவம் கருணாவுக்கு உதவியளித்ததாக ஏற்றுக்கொண்டார். ஆனால இன்று மீண்டும் ஜனாதிபதியும், புதிய இராணுவ தளபதியும் மாறுபட்ட கருத்துக்களை இது தொடர்பில் வெளியிட்டுள்ளார்கள்.

கருணாவுக்கு இலங்கை இராணுவம் உதவியளிக்கவில்லை என நோர்வே சமாதான தூதுவரிடம் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். எனினும் புதிய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட அவ்வாறு தமக்கு தெரியாமல் இராணுவம் உதவியளித்திருக்குமானால் அது பாரிய குற்றமாகும் எனத் தெரிவித துள்ளார். எனவே அரசாங்கதின் இவ்வாறான பதில்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்டுகிறது.

நோர்வே தூதுவரின் தற்போதைய இலங்கை விஜயம் அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருந்துவந்த இடைவெளிகளை குறைப்பதற்கு உதவவில்லை என்றே கருதப்படுகிறது. ஜனாதிபதி, இரண்டு தரப்புக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்படவேண்டும் அதன் அடிப்படையில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என நோர்வே தூதுவரிடம் கேட்டுக் கொண்டபோதும் அதனை எவ்வாறு உருவாக்குவது என்பது சம்பந்தமாக உரிய கொள்கைகளை கொண்டிருக்காமையானது, சமாதான பேச்சுவார்ததைகளை ஆரம்பிப்பதில் பாரிய தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளன. எனவே தற்சமயம் ஜனாதிபதி தமது நிலைப்பாட்டில் பாரிய மாற்றங்களை செய்யவேண்டிய பொறுப்புகளுக்கு உள்ளாகியுள்ளார். முன்னரை போலல்லாமல் தற்சமயம் அவர் மேற்கொள்ளப்போகும் திறமையான நகர்வுகளே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அவர் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும். அதன்மூலமே தடைப்பட்டுள்ள சமாதான நகர்வுகளை அவரால் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பை கொடுக்கும் என்பதே தற்போதைய உண்மை நிலவரமாகும்

சமாதான நகர்வில் ஏற்பட்டுள்ள பின்னடைவானது, இலங்கையின் பொருளாதாரத்தை பாரிய அளவில் பாதித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அதாவது ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின்போது நிலவிய டொலரின் ரூபா பெறுமதி தற்சமயம் 8 ரூபாவினால் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இறக்குமதிப் பொருள் ஒன்றின் மீது செலுத்தப்பட்ட விலையானது தற்சமயம் 8 ரூபாவினால் அதிகரித்துள்ளது. இது இலங்கையின் பணவீக்க நிலையை மேலும் உயர செய்துள்ளது. இதனைச் சமாளிக்க முடியாத நிலையில் - அண்மையில் அரசாங்கம் மத்திய வங்கியின் மூலம் முன்னர் பொதுமக்களிடம் இருந்துபெற்ற கோடிக்கணக்கான ரூபாய் நோட்டுக்கள் மீண்டும் புழக்கத்துக்கு விட்டுள்ளது. இது தற்காலிக பொருளாதார சமாளிப்பு நடவடிக்கையாக இருக்கின்றபோதும் நீண்டகாலத்தில் இந்த நடவடிக்கை நாட்டின் பணவீக்கத்தை அதிகரிக்க செய்யப்போகிறது.

மறுபுறத்தில் நாட்டில் சமாதான சூழ்நிலை கேள்விக்குறியதாகியுள்ளமையால் சுற்றுலாத்துறை கடந்த இரண்டு மாதங்களை காட்டிலும் வீழ்ச்சிப்போக்கை காட்டி நிற்கிறது. நாட்டின் பணவீக்கம் அதிகரித்துள்ளமையால் வாழ்க்கைச் செலவு கூடிச்செல்கிறது. அபிவிருத்திகள் ஸ்தம்பித்துள்ளன. மொத்தமாக அரசாங்கத்தின் மீதான



மக்களின் நம்பிக்கை குறைந்து செல்கிறது.

எதிர்வரும் மாகாண சபை தேர்தலின் பின்னர் அரசாங்கம் தமது நாடாளுமன்ற பெரும்பான்மையை நிரூபிக்கும் என அரசாங்க தரப்பினால் பிரசாரப்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் அதற்கான வாய்ப்பகள் அரிதாகவே காணப்படுகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஜாதிக ஹெல உறுமய என்பன மாகாண சபை தேர்தலின் பின்னர் அரசாங்கத்தில் இணைந்துக் கொள்ளும் என கூறப்பட்டுள்ளபோதும், அந்த கட்சிகள் தமது நிலைப்பாட்டை இதுவரை வெளியிடவில்லை.

ஒருபுறத்தில் குறிப்பிட்ட கட்சிகள் அரசாங்கத்தில் இணைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்கமுடியாது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு அரசாங்கத்தில் இணைந்தால் மாத்திரமே தமது நகர்வுகளை மலையக மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியும் நிலை காணப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமயவை பொறுத்தவரையில் பொதுத்தேர்தலுக்கு முன்னர் அந்த கட்சி தம்வசம் தக்க வைத்திருந்த கொள்கைகள் யாவும் இன்று காற்றில் பறந்துவிட்ட நிலைக்கு உள்ளாகியுள்ளன. பௌத்த தர்மத்திற்காக நாடாளுமன்றம் செல்வதாகக் கூறிய ஜாதிக ஹெல உறுமயவினர், நாடாளுமன்றம் சென்ற பின்னர், முதல் அமர்விலேயே தமது கொள்கையை மாற்றிக்கொண்ட சம்பவம் இடம்பெற்றது.

எனவே அந்தக்கட்சிக்குள் பாரிய பிளவுகள் ஏற்பட்டு தற்சமயம் அந்த கட்சி தமது உள்ளகப் பிளவுகளை மறைப்பதற்காக பாதயாத்திரைகளை நடத்த வேண்டிய கட்டத்திற்கு உள்ளாகியுள்ளது.

எனவே இந்த நேரத்தில் அரசாங்கத்துடன் இணைந்து சென்றால் மாத்திரமே தம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற நிலை ஹெல உறுமயவிற்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால், தற்சமயம் ஜாதிக ஹெல உறுமயவினரும், ஜனாதிபதியும் மாறி மாறி சுமத்திக் கொள்ளும் குற்றச்சாட்டுக்கள் - ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தில் இணையுமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளன.

## மனப்பதிவுகள்... பேராசிரியர் அ.சண்முகதாஸ்



இந்து போர்ட் இராசரத்தினம் வழித் தொண்டாற்றுபவர்

யாழ்ப்பாணத்தில் சைவ நீதியைக காப்பதிலே முன்னின்று உழைத்தவர் ஆறுமுகநாவலர் ஆவார். சைவமும், தமிழும் என்னிருகண்கள் எனக் கூறி அவற்றை வளர்ப்பதற்காகப் பெருந்தொண்டுகள் செய்தவர். சைவநீதியைப் பேண சைவப் பாடசாலைகள் இன்றியமையாதவை என்பதை, உலகிற்கே எடுத்துக் காட்டியவர். நமது முன்னோரது வழிபாட்டு மரபு பற்றிய பயிற்சியைப் பாடசாலைக் கல்வியோடு இணைத்துப் பணியாற்றியவர். சைவசமயம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டிய காலகட்டத்திலே கலங்கரை விளக்குப் போலத் தனியாக நின்று நாவலர் வழிகாட்டினர். அரச ஆதரவுடு நிறுவன அமைப்பும் கொண்ட மிசனரிமாரின் சமயப் பிரசாரத்தைத் தடுப்பதற்கு கோவில்களும், மடங்களும் மட்டும் போதாது, ஒரு நிறுவன அமைப்பும் தேவை. எனவே, ஈழம் முழுவதும் சுதேசப் பண்பாட்டை எழுச்சி பெறச் செய்ய, ஒரு நிறுவனம் தோற்றம் பெற வேண்டியிருந்தது. அதனை நாவலர் வழி நின்று சமயப்பணி செய்தோர் நிறைவேற்ற முயன்றனர். அந்த வகையில் சைவபரிபாலன சபையும், சைவவித்தியா விருத்திச் சங்கமும் தோற்றம் பெற்றன.

நாவலர் வழிநின்று சேர்.பொன்னம்பலம் இராமநாதன் சைவசமயக் கல்வியின் வளர்ச்சியின் பொருட்டு, ஒரு நிர்வாக சபையை அமைத்தார். அந்தச் சபையின் தலைமைப் பொறுபபை அவரே ஏற்றார். சைவமணி வட்டுக் கோட்டையூர் மு.சி. இராசரத்தினம, காரியதரிசியாகப் பொறுப்பேற்றார். வைத்திலிங்கம் துரைசாமி, சுப்பிரமணியம் இராசரத்தினம், அ.சபாபதி, மானிப்பாய் வி.வீரசிங்கம், சு.சிவபாதசுந்தரம், கோப்பாய் முருகேசு சுவாமிநாதன் ஆகியோர் சபை அங்கத்தவர்களாகப் பணியை ஏற்றனர். இந்தச் சபையின் முதற் கூட்டம் 29-10-1923 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சைவப் பெருமன்றம் அமைத்து, சைவத்தைக் காக்க வேண்டும் என்று தீர்மானித்தனர். 10-11-1923 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் சைவப்பிள்ளைகளின் கல்விக்கு ஏற்ற சூழலை அமைத்தல் இன்றியமையாதது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானப்படி 09-12-1923 ஆம் ஆண்டு சேர் பொன்.இராமநாதன் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை தொடக்கி வைத்தார். தமிழ் மக்களின் பண்பாட்டுக் கல்விப்பயிற்சிக்கான கல்வியை நல்குவதே சங்கத்தின் தலையாய இலக்காக அமைய வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார். இந்தச் சங்கத்தின் பணிகள் எல்லோராலும் நன்கு உணரப் பட 1926 ஆம் ஆண்டு சட்ட நிருபண சபையின் சங்கம் பற்றிய சட்டமூலத்தைம, சேர்.வைத்திலிங்கம் துரைசாமி முன் மொழிய சு.இராசரத்தினம் வழிமொழிநதார். சைவ வித்தியா விருத்திச் சங்கததின் ஆங்கில மொழிபெயர்ப்பாக **HINDU BOARD OF EDUCATION** என அமைந்திருந்தது. இந்தச் சட்டம 1926 ஆம் ஆண்டு 23 ஆவது **ORD INANCE** ஆக விளம்பரப்படுத்தப்பட்டது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின பணிகளில் நீண்ட காலம் தன்னை இணைத்துக் கொண்டவர் சு.இராசரத்தினம். அதனால் அவர் இந்து போர்ட் இராசரத்தினம் என்று அழைக்கப்பட்டார். 1924 ஆம் ஆண்டு தொடக்கம் 1940ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஈழத்தின் பல பாகங்களிலும், சைவ வித்தியா விருத்திச் சங்கம் மற்றும் பல பாடசாலைகளை அமைக்க முன்னின்று உழைத்தார். கிறிஸ்தவ மிசனரிமாரின் சமயப் பிரசாரத்துக்கான புதிய பாடசாலைகள் அமைப்பு, இராசரத்தினை அயராது உழைக்கத் தூண்டியது. மேலைத்தேயக் கல்வியும், மதமும் தமிழ் மக்களை வசியப்படுத்தும் வேளையில் இராசரத்தினத்தின் பணி காலத்தின் தேவையாக இருந்தது. சைவசமயமும், தமிழ் மொழியும் சிதையாமல் பேணப்பட வேண்டும் என மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியிருந்தது. வறுமை காரணமாகவும் சமூக ஏற்றத் தாழ்வு காரணமாகவும் ஒதுக்கப்பட்ட மக்களிடையே ஊடுருவி, அவர்களைச சமயம மாற்றும் பணியை மிசனரிமார் செய்து கொண்டிருந்தனர். எனவே, இராசரத்தினம் அதனைத் தடுப்பதற்காகத் தமிழ்ப் பாடசாலைகள், இருமொழிப் பாடசாலைகள், ஆங்கிலப் பாடசாலை,காவியப்பாடசாலை, நெசவுப பாடசாலை, பன்னவேலைப் பயிறசிப பாடசாலை, சிங்களப் பாடசாலை, ஆசிரியர் கலாசாலை, அநாதை விடுதி எனப் பலவற்றை அமைத்தார்.

மக்களின் சைவ வாழ்வியலின் அடிப்படையை மாற்றும் பிறமொழி, மதச் செல்வாக்கை இராசரத்தினம் பாடசாலைகளை அமைப்பதன் மூலம், நலிவடையச் செய்தார். கல்வியின் தேவையை, மக்களின் தேவையை உணர்ந்து ஊட்டும் பணியில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை வழி நடத்தினார். இதனால், சிறார்களுககென விடுதியினையும் அமைத்தார். விடுதியிலிருந்து பாடசாலைக் கல்வியை மேற்கொள்ளும் போது, ஒரு ஒழுங்கான சைவ வாழ்வியலையும் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தினார். 1928ஆம் ஆண்டில் ஆண்கள் விடுதியை அவர் சங்கத்தின் உதவியோடு அமைந்தபோது, திருநெல்வேலி கிராமம் ஒரு புதிய சூழ்நிலையை எதிர்கொண்டது. விடுதி மாணவர்களுக்கு விவசாயம், நெசவு ஆகியவற்றில் பயிற்சி கொடுத்து, தொழில் வல்லுனராக்கினார். 1036 ஆம் ஆண்டு பெண்கள் விடுதியும், செல்லையா சபாபதி என்பவர் வீட்டில் தொடங்கப் பெற்று, சைவக்கலவிப் பயிற்சியில் பெண்பிள்ளைகளும் இணைக்கப்பட்டனர். 'முத்துத் தம்பி அநாதை இல்லம்' என்ற பெயர் ஈழநாட்டில் எல்லோராலும் அறியப் பெற்று ஆதரவற்ற சிறார்களுக்கும் அடைக்கலமும், கல்வியும் அளிக்கின்ற கொடை நிறுவனமாகச் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் புகழ் பெற்று விளங்கியது.

சைவப்பண்பாட்டுப் பயிற்சியை மக்களிடையே பயிற்றுவதற்கு நல்லாசிரியர்கள் தேவை. எனவே, இராசரத்தினம் சைவ ஆசிரிய பயிற்சிக்கலாசாலையை நிறுவினார். பல இடையூறுகளை அவர் எதிர் கொண்டபோதும் மனம் தளராது தனது பணியை முன்னெடுத்தார். திருநெல்வேலி மக்களின் நிலக்கொடையால், அவரது சைவக கல்விப் பணி நிலைபெற்றது. தன்னுடைய சட்டத்தரணிப் பணியோடு, சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிகளையும் செவ்வனே செய்த அவர் அந்தக காலத்தில் சைவ சமய வளர்ச்சிக்காக உழைத்த நிறுவனங்கள் அனைத்திலும் இணைந்திருந்தார். சைவ வித்தியா விருத்திச் சங்கததில் 1928 - 1936 ஆம் ஆண்டு வரை முகாமையாளராக இருந்தார். 1937 - 1970 ஆம் ஆண்டு வரை சங்கத்தின் நிரவாகச் செயலராக இருந்தார். ஏறக்குறைய 42 ஆண்டுகள் சைவத்தின் காவலராக அவர் செய்த பணி இன்று நினைவிற் கொள்ளப்பட வேண்டிய சிறப்புப் பெற்றது. வருவாய் தரும் சட்டத்தரணித் தொழிலைத் தியாகம் செய்து விட்டு, சங்கப்பணிகளில் தன்னை முழுமையாக இணைத்துக் கொணட அவரது கொடை உள்ளம் போற்றப்பட வேண்டியது. மாணவர்களை ஒழுககசீலர்களாகவும, கல்விப்பயிற்சி பெற்றவர்களாகவும் உருவாக்குவது மட்டுமன்றி, தமது நாட்டுக்குச் சேவை செய்யும் தியாகசீலர்களாகவும் உருவாகக வேண்டுமென அல்லும் பகலும் பாடுபட்டார். அவர் சிறாருக்கு 'நீங்கள் வாழ்ந்த எம்நாடு தியாகம் புரிந்தது எம்நாடு' என்ற இசைப் பாடலைச சொல்லிக் கொடுத்து, அவர்களுடைய உள்ளத்திலே நாட்டுக்கான பணியைச செய்யும் ஆவலை விதைத்து விட்டார்.

இவர் எங்கெல்லாம் பாடசாலைகள் தொடங்கினாரோ, அங்கெலலாம சங்கப் பணியையும் நட்டு வைதததார். முருகபக்தராக இருந்தமையும், யோகர்சுவாமிகளிடம் ஈடுபாடு கொண்டமையும் இவர் பணிக்கு என்றும் துணைநின்றன. சங்கத்தின் வரலாற்றில் இவர் வரலாறும் என்றும் இணைந்தே நிற்கும் சங்கத்தின் மூலம் இவர் பொதுமக்களுக்குச் செய்த சேவை, சங்கத்தின் குறிக்கோளையும், இலக்கையும் நிறைவேற்றியுள்ளது. தனது பணிக்காக அவர் பல செல்வந்தர்களை அணுகி கொடை பெற்றார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் கூற்று இவர் உள்ளத்தில் பதிந்து இவரை இயங்கவைத்தது.

இராசரத்தினத்தின் பணியை இன்று பலர் அறியாதுள்ளனர். இவருடைய பணியை க.சிற்றம்பலம் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

நெப்போலியன் என்னும் பிரான்சிய வரனை உலகறியும். அந்தக் காலதது ஐரோப்பியர் ஒவ்வொருவரும் விழித்தெழும் போது, நெப்போலியனை நினைவுகூருவர் என்பதை சரித்திர அறிஞர்கள் நன்கு அறிவர். அதே போல் தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு கத்தோலிக்கனும் நித்திரை விழிக்கும் போது, சு.இராசரத்தினத்தை நினைவுகூருகிறார்கள். கத்தோலிக்க சமயவளர்ச்சிக்கு சு.இராசரத்தினம் தடையாக இருந்ததாலேயென்க, ஐம்பது சைவக்குடிகள் ஓர் இடத்தில் இருக்கின்றன. அங்கே ஒரு கிறிஸ்தவப் பாடசாலை இருந்து வருகிறது. இதனைத் சு.இரா சரததினம் காண்கிறார். அடுத்த நாளே, அடுதத வேலியில் சைவப் பாடசாலை ஆரம்பிக்கின்றார். இரண்டாம் மாதத்திலே கிறிஸ்தவப் பாடசாலையும், கிறிஸ்தவ சமயப் பேச்சும் மறைந்து விடுகின்றன. இந்த நிலையில் கிறிஸ்தவர்கள் இராசரத்தினத்தைக் கனவிலும் நினைவு கூரக்கூடாது. என்ன தான் செய்வாரோ?

இத்தகைய இராசரத்தினத்தின் தொடர்ந்த - இடையறாத முயற்சி ஈழத்தில் ஏறக்குறைய 300 சைவப் பாடசாலைகளைத் தோற்றுவித்திருநதது. ஆனால், இந்தப் பாடசாலைகளில் 182 பாடசாலைகள் 1960-15-08 திகதியன்று அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. அதனால் அந்தச் சைவப் பாடசாலைகள் சைவப்பயிற்சியில் முழுமையாக ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டது. ஆனால். சைவச் சிறார்கள் விடுதியை அரசாங்கம் பொறுப்பேற்காமல் காத்தார். இன்று வரை அது சைவச் சிறுவருக்குச் சைவ வாழ்வியல் பயிற்சியை அளித்து, கல்விவாய்ப்பையும் நல்கிவருகிறது.

இன்று சு.இராசரத்தினத்தின் 120 ஆவது பிறந்ததினமாகும். சைவ சமயத்தை நமது நாட்டிலே நிலை பெறச் செய்த அவர் பணியை வரலாற்றில் மறகக முடியாது. அவருடைய வழியில் பணிசெய்வோர் இன்று யாருமில்லை. சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் இன்றியமையாத பணி, சைவத் தமிழப் பண்பாட்டைப் பேணுவதும் அதனை எமது அடுத்த தலைமுறையினருக்குப் பயிற்றுவதுமாம்

சைவ வித்தியா விருத்திச் சங்கம் 1993ஆம் ஆண்டில் இடருக்குள்ளான போது, அதன் பொறுப்பையேற்று சீர்செய்யும் பணி தெய்வாதீனமாகக் கிடைத்தது. பல நெருக்கடியான நிலைமைகளோடு, சங்கப்பொறுப்பை ஏற்றுப் 10 ஆண்டுகள் சேவை செய்து, மீண்டும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை கட்டியெழுப்ப முடிந்தது இறையருளே. 1995ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வையும் எதிர் கொண்டு, சங்கம் இயங்குவதற்கு இறையருளும், சு.இராசரத்தினத்தின் வழிகாட்டலும் துணையாக பணியை நிறைவு செய்ய முடிந்தது. 2000 ஆம் ஆண்டு பெரியார் இராசரத்தினதின் நினைவுச்சிலை சைவவித்தியா விருததிச் சங்க வளவில் செய்யப்பட்டது. அந்தப் பெரியாரின் கூர்ந்த நோககுடைய பணி இன்று தொய்வடைந்துளளது. எமது தமிழர் பண்பாட்டையும, சைவ வாழ்வியலையும் சிதைக்கின்ற மேலைநாட்டு மோகமும், கவர்ச்சியும் வேகமாகப் பரவிவரும் வேளையில் அவரை நினைந்து பணி செய்ய வேண்டியது அனைவரதும் தலையாய கடனாகும் நாம் எதிர்கொள்ளும இன்னல்களும, இடையூறுகளும், அன்பும் தொண்டும் இணையாத வாழ்வினால் ஏற்பட்ட பயன்களாகும்.

எனவே, பெரியார் சு.இராசரத்தினத்தின் செந்நெறியில் நாமும் பின் தொடர்ந்து நாவலரைப் போலச் சைவத்தை ஒரு கண்ணாகவும், தமிழை மறு கண்ணாகவும் கொண்டு பணி செய்து முன்வருவோமாக.

> சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகளில் நீண்ட காலம் தன்னை இணைத்துக் கொண்டவர் சு.இராசரத்தினம். அதனால் அவர் இந்து போர்ட் இராசரத்தினம் என்று அழைக்கப்பட் டார். 1924 ஆம் ஆண்டு தொடக்கம் 1940ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ஈழநாட்டின் பல பாகங்களிலும், சைவ வித்தியா விருத்திச் சங்கம் - பல பாடசாலைகளை அமைக்க முன்னின்று உழைத்தார். கிறிஸ்தவ மிசனரிமாரின் சமயப் பிரசாரத்துக்கான புதிய பாடசாலைகள் அமைப்பு, இராசரத்தினை அயராது உழைக்கத் தூண்டியது. மேலைத்தேயக் கல்வியும், மதமும் தமிழ் மக்களை வசியப்படுத்தும் வேளையில் இராசரத்தினத்தின் பணி காலத்தின் தேவையாக இருந்தது.

## ஈழம் முழுவதும் சுதேச பண்பாட்டை எழுச்சி பெறச் செய்தோர் வரிசையில்

## நூல் நோக்கு




நூல் :- "கலங்கரை சூழற்புவியியல்"
ஆசிரியர் :- கு.கிரிதரன் BA (Hons),Geo,Spl
வெளியீடு :- கலங்கரை வெளியீட்டுப்பிரிவு.
பதிப்பு :- மயூரி கிரபிக்ஸ். நல்லூர்.
பக்கங்கள்:- 84

கலங்கரை நிறுவனத்தால் வெளியீடு செய்யப்படுகின்ற இரண்டாவது நூல் இதுவாகும். இந்த நூலானது க.பொ.த (உயர்தரப் பரீட்சை) மாணவர்களில் புவியியல் பாடத்தினைக் கற்கின்ற மாணவர்களின் ஒரு பகுதித் தேவையினை முற்று முழுதாக நிறைவு செய்யும் நோக்குடன் ஆசிரியர் கு.கிரிதரனால் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன், பல்கலைக் கழக வெளிவாரி மாணவர்களும் (**G.A.Q**) மேலதிக பாடங்களில் ஒன்றான "சூழலியல்" என்ற பாடத்தினைத் தெரிவு செய்யும் போது இந்த நூலினைப் பயன்படுத்தமுடியும்.

"சூழல்" என்ற பாடத்திற்கான வரையறைகளைத் தெளிவாக இந்த நூலின் முதலாவது பகுதி விளக்குகின்றது. இந்தப் பாடத்தின் வரைவிலக்கணம் சார்ந்தே வினாக்கள் உயர்தரப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்படுவதாலும், குறிப பாக உயிர்க்கோளம், உணவுச் சங்கிலி, சக்திக் கடத்தற் பாதைகள் (உயிர்க்கோளத்தில்) என்பன இதில் பிரதானமாக அமைவதாலும், இந்தப் பகுதி அதிக முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்பட்டுள்ளது.

"சூழற் கல்வியின் வளர்ச்சி" நிலை பற்றி இரண்டாவது அத்தியாயம் விளக்குகின்றது. இந்தப்பகுதி பல்கலைக்கழக உள்வாரிப் புவியியல் மாணவர்களுக்கும், மற்றும் கலைத்துறை வெளிவாரி மாணவர்களுக்கும் தேவையான விடயங்களைக் கொண்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயம் "சூழல் நெருக்கடி" என்ற வகையில் அமைந்துள்ளது. அயனவலயக் காடழிப்பு, உயிர்ப்பல்லினத் தன்மை அழிவு, வனவிலங்குகள் அழிவு, பாலைவனமாதல், வளிமண்டலப் பாதிப்புக்கள், கரையோரப் பிரதேசங்கள் அரிக்கப்படுதல், மாசடைதல், முருகைக்கல் அகழ்வு, புவிக்கோள வெப்பநிலை அதிகரிப்பு, ஓசோன் படைப் பாதிப்பு, மண்வள சீரழிவுகளும், வண்டல் சார்ந்த பிரச்சினைகளும் என்பவற்றை உள்ளடக்கத் தெளிவான விளக்கங்களையும், உதாரணங்களையும் கொண்டுள்ளது.

நான்காவது அத்தியாயம் "சூழல் மாசடைதல்" தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. இது வரைவிலக்கணம், விவசாயம் தொடர்பாக எதிர் நோக்கப்படும் பிரச்சினைகளான மண்ணரிப்பு, நிலச்சரிவு, கிருமிநாசினிகள் முதலான இரசாயணங்களால் ஏற்படும் பாதிப்புக்கள், பசுமைப் போர்வை சுருங்குதல் போன்றவற்றையும், கைத்தொழில் தொடர்பான பிரச்சினை, நகராக்கம் தொடர்பான பிரச்சினை, இலங்கையின் சூழற்பிரச்சினைகள் என்பனவற்றை விளக்குகின்றது.

ஐந்தாவது அத்தியாயம் "சூழற்பாதுகாப்பு" தொடர்பாக எழுதப்பட்டுள்ளது. சூழற்பாதுகாப்புக்கான வரைவிலக்கணம், நிலைத்து நிற்கும் அபிவிருத்தி, சூழற்பாதுகாப்பு அணுகுமுறைகள், மதரீதியான சிந்தனைகளும் சியாட்டல் வாசகங்களும், சர்வதேச சூழல் இயக்கங்கள், இலங்கையின் சூழற்பாதுகாப்பு போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

தனது கற்பித்தல் அனுபவத்தின் அடிப்படையில் ஆசிரியர், மாணவர்களின் தேவைக்கேற்ற அளவில் இரத்தினச் சுருக்கமாக இந்த நூலுக்கு உபதலைப்புக்களிட்டு அழகுற எழுதியுள்ளார். சொல்லாடல் வித்தைகள் தவிர்க்கப்பட்டுள்ளது. புதிய பாடத்திட்டத்தில் 1997ஆம் ஆண்டிலிருந்து 2004ஆம் ஆண்டு வரை கேட்கப்பட்ட அனைத்து விடயங்களும் இந்த நூல் ஒன்றைப் பயன்படுத்தியே விடயளிக்க முடியும் என்பது மற்றொரு சிறப்பம்சம். எனது மாணவனான இவர் இதற்குமுன் வெளியிட்ட "கலங்கரை - தேசப்பட வழிகாட்டி" என்ற நூலும் மாணவர், ஆசிரியர் மத்தியில் அமோக வரவேற்பைக் பெற்று ஐந்து மாதங்களுக்குள் மூன்று பதிப்புக்களாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நூலினை புவியியல் மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்தி நல்ல பெறுபேறுகளைப்பெறுவார்கள் என்பது திண்ணம்.

நூலகம் யாழ்ப்பாணம்

# பீகாரில் ஜாதிக்கலவரம் 8 பேர் பலி; மூவர் காயம்

இந்திய - பீகார் மாநிலத்தில் இடம்பெற்ற ஜாதிக்கலவரத்தில் எட்டுப் பொது மக்கள் உயிரிழந்ததாகப் பீகார் பொலிஸார் தெரிவித்தனர்.

பீகார் மாநிலத்திலுள்ள நவாடா மாவட்டத்தில் சக்வாய் கிராமத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் மூன்று பொது மக்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் உயர் சாதியினருக்கும், தாழ் சாதியினருக்கும் இடையில் இடம்பெற்ற வன்செயல்களின் தொடர்ச்சியாக இருபகுதியினரும் பழிவாங்கும் முகமாகவே இந்தத் தாக்குதல்களில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வன்செயல்கள் இடம்பெறாமல் தடுப்பதற்காக, நவாடா மாவட்டத்திற்கு செல்லும் பிரதான வீதிகள் அனைத்தையும் தாம் மூடி விட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பீகாரில் இடம்பெற்றுவரும் சாதிக் கலவரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

# அமெரிக்க கடற்படை வீரர் உட்பட அறுவர் பாக்தாத்தில் நடந்த தாக்குதலில் பலி!

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் இருவேறு இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஐந்து ஈராக்கியப் படையினர், ஒரு அமெரிக்கக் கடற்படை வீரர் உட்பட அறுவர் கொல்லப்பட்டனர்.

தலைநகர் பாக்தாத்தின் தென் பகுதியிலுள்ள ஈராக்கிய இராணு சோதனைச் சாவடிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து ஈராக்கியப் படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஐவர் படுகாயமடைந்ததாக உள்ளூர் வைத்தியசாலைப் பணிப்பாளரான தாவுத் ஹிசைன் தெரிவித்தார்.

பாக்தாத்தின் மேற்குப் பகுதியிலுள்ள அன்பர் மாகாணத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது அமெரிக்கக் கடற்படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மேலதிக விபரங்கள் எதுவும் தெரியவில்லையெனவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.



ஈராக்கியப் படையினரின் மீது நடத்தப்பட்டதாக்குதலானது ஈராக்கிய பிரதி வெளியுறவு அமைச்சர் ஹமீட் அல் பயாட்டி, பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் நாடுகளிடம் ஈராக்கியப் படைகளுக்கான பயிற்சி உதவிகளைக் கோரியமறுநாள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கிய பிரதி வெளியுறவு அமைச்சர், அல் - அராபிய தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது-

நாம் எமது இராணுவத்தையும், பொலிஸாரையும் வளர்க்க வேண்டியுள்ளது. எனவே, இந்தப் படைகளுக்கு பயிற்சிகளை வழங்கவேண்டும். அதற்கு நேட்டோ அமைப்பில் அங்கத்துவம் பெறும் நாடுகளின் உதவியைக் கோரியுள்ளோம். குறிப்பாக ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் இரண்டும் முக்கியமானவை. எனவே, எமது படைகளுக்குத் தேவையான பயிற்சி உதவிகளை வழங்குமாறு நாம் இவற்றிடம் கேட்டுள்ளோம்.

அத்துடன், உலகிலுள்ள சகல நாடுகளுடனும் சமநிலையான உறவை வளர்க்கவே நாம் விரும்புகின்றோம். சர்வதேச சமூகத்திடம் நாம் கேட்பதெல்லாம் ஈராக்கைக் கட்டியெழுப்புவதற்கும், அதன் மூலமாக ஜனநாயகம், மனித உரிமைகளை வளர்க்கவும் உதவி புரியுங்கள் என்பதே என பயாட்டி தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கியப் படைகளுக்கு பயிற்சியளிப்பதெனில் அது அந்த நாட்டிற்கு வெளியிலேயே நடத்தப்பட வேண்டுமென பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்சிராக் மற்றும் ஜேர்மன் சான்சிலர் ஹேகாட் ஸ்ரூடர் இருவரும் தெரிவித்துள்ளனர்.

## பாக்தாத்தின் தென்பகுதியில்

# ஆயுதத் தொழிற்சாலையொன்றை அமெரிக்க படையினர் கண்டுபிடிப்பு

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் தென் பகுதியில் ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை அமெரிக்கப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தத் தொழிற்சாலையிலிருந்து குண்டு தயாரிக்கப்பயன்படும் பொருட்கள், பெருமளவு ஆயுதங்கள், வெடி மருந்துகள் மற்றும் பெருமளவு பணம் என்பனவற்றைத் தாம் கைப்பற்றியதாக அமெரிக்க இராணுவம் விடுத்த அறிக்கை தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக 51 பேரை விசாரணைக்காக அமெரிக்க இராணுவம் அழைத்துச் சென்றுள்ளது. இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட காரணத்தால் ஈராக்கிய படைகளுக்கெதிராக செயற்படுபவர்களுக்கு பாரிய பின்னடைவென அமெரிக்க இராணுவ அதிகாரியான லெப் கேணல் ஜேம்ஸ் ஹட்டன் தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவத்தின் முதலாவது கவால்ரி படைப்பிரிவின் படையினர் பாக்தாத்தின் தென் பகுதியில் ஆயுதத் தொழிற்சாலையொன்றைச் சோதனையிட்டு வாகனங்களுடன் பொருத்திய பாரிய ஆயுதங்களைக் கைப்பற்றியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

மற்றொரு படைப்பிரிவான எட்டாவது கவால்ரி படைப்பிரிவினர் வேறொரு இடத்தில் நடத்திய தேடுதலில் 8,750 டொலர் பணமும், வேறு சில ஆவணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் ஏ.கே.துப்பாக்கிகள் 5, ரவைகள் 500, ரைமர், வயர்கள் றொக்கட் கிரனைட் லோஞ்சர், என்பனவும் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூவர் விசாரணைக்காக அமெரிக்க இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

மற்றொரு இடத்தில் ஆர்.பி.ஜி. எறிகணைகள் எட்டு, 50 கிலோகிராம் சி4 வெடிமருந்து, டிற்னேற்றர் ஒன்று என்பனவற்றை அமெரிக்கப் படையினர் கண்டுபிடித்தனர்.

இதன்போது, 30 பேர் கைது செய்யப்பட்டதாக அமெரிக்கப் படையினர் தெரிவித்தார். மற்றைய எட்டு இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் எட்டுப்பேர் கைது செய்யப்பட்டனர்.



இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதற்கு இவர்கள் காரணமாக இருக்கலாமெனக் கூறப்படுகிறது.

இந்த ஆயுதத் தொழிற்சாலைகளுக்கு நிதி வழங்குபவரையும், தாக்குதல் நடத்துபவரையும், தாம் கைது செய்துள்ளதாக அமெரிக்கப் படையினர் நம்புவதாக தெரிவிக்கப்படுகிறது.




# படம் திரையிடப்பட்ட முதல் நாளிலேயே 400 கோடியை குவித்த ஸ்பைடர்மேன் - 2

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

சில வருடங்களுக்கு முன் "ஸ்பைடர் மேன் - 1" ஆங்கிலப் படம் உலகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. அதில் கதாநாயகனாக வரும் ஸ்பைடர் மேன் சிறியவர்கள் முதல பெரியவர்கள் வரை அனைவராலும் பாராட்டப்பட்டார்.



இதற்கு கிடைத்த வரவேற்பு ஹொலிவுட் தயாரிப்பாளர்களை வியப்படையச் செய்தது. வசூலிலும் அந்தப் படம் சாதனை படைத்தது. தற்போது அதே யுத்தியை கையாண்டு கம்ப்யூட்டர் கிராபிக்ஸ், கார்ட்டூன் அனிமேசன் முறையில் 'ஸ்பைடர் மேன் - 2''ஆம் பாகம் தயாரிக்கப்பட்டது.

ஸ்பைடர் மேன் - 1 ஏற்படுத்திய பரபரப்புக் காரணமாக 'ஸ்பைடர் மேன் - 2' படத்துக்கும் உலகம் முழுவதும் பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. கடந்த ஜுன் 30ஆம் திகதி (புதன்கிழமை) இந்தப் படம் உலகம் முழுவதும் திரையிடப்பட்டது.

திரையிட்ட முதல் நாளிலேயே 'ஸ்பைடர் மேன் - 2'' இலங்கை மதிப்பின்படி ரூபா. 400 கோடி வசூலித்து புதிய சாதனை படைத்தது.

'ஸ்பைடர் மேன்' முதல் பாகம் வெள்ளிக்கிழமை வெளியானது. அப்போது வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ரூபா 516 கோடி வசூலானது.

இந்த முறை 'ஸ்பைடர் மேன் -2'' முன்கூட்டியே புதன்கிழமை வெளியிடப்பட்டது. முதல் நாளே வசூலைக கொட்டியதால் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இதன் வசூல் பழைய சாதனைகளை முறியடிக்கும் வகையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன் புதன்கிழமைகளில் திரையிடப்பட்ட முதல் நாளில் அதிக வசூல் கண்ட படமாக 'த லோட் ஒப் த ரிங்க்ஸ் - த ரிடர்ன் ஒப் த கிங்' படம் இருந்தது. அந்த படம் ஒரே நாளில் ரூபா 155 கோடியை வசூலித்தது. இப்போது அந்த சாதனையை 'ஸ்பைடர் மேன் - 2' முறியடித்துள்ளது.

'ஸ்பைடர் மேன் - 2' போல 'ஸ்ரெக் - 2' ஆங்கிலப் படமும் வசூலில் சாதனை படைக்கிறது.

கம்ப்யூட்டர் அனிமேசன் முறையில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் திரையிட்ட 43 நாளில் பழைய சாதனைகளை முறியடித்து உள்ளது.

66 நாளில் 'ஸ்பைடர் மேன் - 1', 'டைட்டானிக்' படங்கள் குவித்த வசூலை 'ஸ்ரெக் - 2' படம் 43 நாளில் நெருங்கி இருக்கிறது.



புலியும், பன்றிக்குட்டியும் அமெரிக்காவில் லொஸ்ஏஞ்சல்ஸிலுள்ள வனவிலங்கு சரணாலயத்தில் ஒன்றாக இருக்கும் காட்சி

# டர்பூர் பிரதேச நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சூடான் உறுதியளித்ததாக அனான் தெரிவிப்பு

சூடானின் டர்பூர் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கான அனைத்துத் தடைகளையும் அகற்றுவதாக சூடான் அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்தார்.

டர்பூர் பிரதேசத்திற்கு அருகிலுள்ள சட் அகதிமுகாமிற்கு செய்த அனான் அந்த விஜயத்தை முடித்து திரும்புகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், அராபிய ஆயுதக் குழுக்களிடமிருந்து சூடான் அரசு ஆயுதங்களைக் களைந்து டர்பூர் பிரதேசத்தில் மக்கள் வாழ்வதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.



இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழ்பவர்கள் அவர்களது வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படாவிட்டால் பஞ்சத்தாலும், நோய்களாலும் பெருமளவில் உயிரிழக்கும் நிலை உள்ளதாக ஐ.நா. எச்சரித்துள்ளது.

அகதி முகாமில் வாழும் சுமார் பத்தாயிரம் அகதிகள் இந்த மாத மழைப் பருவத்தில் வயிற்றோட்டம், மலேரியா மற்றும் பிறநோய்களால் மரண விளிம்பில் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்தது.

செயலர் அனான், சூடான் பிரதமர் ஓமர் அல் பசீரிடம், அகதிமுகாம்களில் இருக்கும் மக்களை வீடுகளுக்குச் செல்லும் வகையில் நிலைமைகளை உருவாக்குமாறும், ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறும் கேட்டுக் கொண்டார்.

எனது செய்தி சாதாரணமானது. வன்செயல்கள் கட்டாயம் நிறுத்தப்பட வேண்டும் என அனான் தெரிவித்தார்.

டர்பூர் பிரதேசத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த 6000 படையினரை பணியில் ஈடுபடுத்தவுள்ளதாக சூடான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். ஆனால், இந்தப் படையினர் எப்போது பணியில் ஈடுபடுத்தப்படுவதென்பதனை அவர் தெரிவிக்கவில்லை.



இதேவேளை, டர்பூர் பிரதேசத்தின் ஆயுத தாரிகளுக்கும், சூடானிய அரசாங்க அதிகாரிகளுக்குமிடையில் எதிர்வரும் 15ஆம் திகதி எத்தியோப்பாவின் தலைநகரில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆபிரிக்க ஒன்றியத் தலைவர் அல்பா ஓமர் கோர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஆயப்பகுதி சுமையுந்துப் பிரிவு நாளை மாலை இயங்காது

(யாழ்ப்பாணம்)

நாளை நடைபெறவுள்ள கரும்புலிகள் நினைவுநாள் நிகழ்வை முன்னிட்டு நாளை மாலை 4.00 மணிமுதல் செவ்வாய்க்கிழமை 6 மணிவரை ஆயப்பகுதியின் சுமையுநதுப்பிரிவு இயங்கமாட்டாதென ஆயப்பகுதி அறிவித்துள்ளதாக யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வணிகர் கழகம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு திங்கட்கிழமை பிற்பகல் 4.00மணி தொடக்கம் ஆயப்பகுதியின் சுமையுந்துப்பிரிவு இயங்கமாட்டாது. செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிமுதல் புளியங்குளம் ஆயப்பகுதியின் சுமையுந்துப் பிரிவு மீண்டும் வழமைபோல இயங்கும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயப்பகுதி சகல வர்த்தகர்களுக்கும் அறிவுறுத்தியிருக்கின்றது என வணிகர்கழக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# கரும்புலிகளை நினைவு கூருமாறு தொழிற்சங்க கூட்டமைப்பு அழைப்பு

தமிழ்த் தேசியத்தின் விடிவுக்காக தமிழீழ தாயகத்தில் முகிழ்ப்பின் பெருவெடிப்பாக, உயிராயுதமாக தம்மையே ஈகமாக்கிய கரும்புலிகள் நினைவுநாள் நாளை அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இந்தப் புனித நாளில் கரும்புலிகளை நினைவு கூரும் நிகழ்வுகளில் தமிழ் மக்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தொழிற சங்கங்களின் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தமிழ்த் தேசியத்தின் விடிவுக்காக, தமிழீழத் தாயகத்தின் முகிழ்ப்பின் பெருவெடிப்பாக, உயிராயுதமாக தம்மையே ஈகமாக்கிய தமிழ் மக்களின் உணர்வுடன் ஒன்றிவிட்ட, உன்னதத்தின் உச்சத்தையெட்டிய கரும்புலிகளை நெஞ்சத்திலிருத்தி நினைவு கூரும் நாள் கரும்புலிகள் நாள்.

எங்கெங்கெல்லாம் இலக்குகள் அமைகின்றனவோ, அங்கெல்லாம் இலக்குத் தவறாது, தமிழ் மக்களின் இருப்பை உறுதிசெய்வதற்காக, அந்த இலக்குகளைத் தாக்கியழிக்கும் உயர்திறனைக்கொண்ட கரும்புலிகளே, தமிழீழ மக்களின் அபிலாஷைகளை எட்டுவதற்கான உயிராயுதங்கள்.

தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை புறந்தள்ளி, சமாதானத்திற்கான நகர்வுகளைக் கேள்விக்குரியதாக்கிய, போரை நோக்கி பொருத்தமான அரிதாரப் பூச்சுக்களுடன் சிறீலங்காப் பேரினவாதம் பேயாட்டம் போடத் தயாராகிவரும் வரலாற்றுக் கட்டமிது.

இந்த வரலாற்றுக் கட்டத்தின் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு இடையறாத விழிப்புடன் தமிழ்த் தேசியத்தைத் தக்கவைக்க தமிழ் மக்கள் அனைவருமே அணி திரளுவோம். ஒரே தலைமையின் கீழ் அணி திரளுகைக்கான பாதையில் கரும்புலிகள் ஒளிர் வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள்.

வரும் நாளைய நாள், கரும்புலிகளை தமிழ் மக்கள் அனைவருமே நினைவு கூரும் புனிதநாள். இந்நாளில் கரும்புலிகளை நினைவு கூருவதற்கான நிகழ்வுகள் பரந்தளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்புனித நாளில் கரும்புலிகளை நினைவுகூரும் நிகழ்வுகளில், தமிழ் மக்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# புலிக்கொடியை இறக்குமாறு படையினர் நிர்ப்பந்தித்தனர்!

## பொது மக்களின் எதிர்ப்பால் திரும்பினர்

திருகோணமலையின் நிலாவெளிப் பிரதேசத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு, நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 1.30 மணிவரை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினையும் தேசியக்கொடியினையும் இரண்டு மாவீரர்களின் சகோதரர்கள் ஏற்றிவைத்தனர். நிகழ்வின் சிறப்புரையினை மாவட்ட அரசியற துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், மகளிர் அரசியறதுறைப் பொறுப்பாளர் காருண்யா ஆகியோர் ஆற்றினர்.

இந்த நிகழ்வு நடந்துகொண்டிருக்கையில் மதியம் 12.30 மணியளவில் இலங்கை இராணுவ அதிகாரிகள் வந்து, நிகழ்வுக்காக ஏற்றப்பட்டிருந்த தேசியக்கொடியினை உடனடியாக இறக்குமாறு வற்புறுத்தினர்.

ஆனால் இந்த விடயம் தொடர்பாக தாம் பல தடவை கண்காணிப்புக்குழுவிற்கு அறிவித்து அவர்களது அனுமதியுடனேயே இந்த நிகழ்வில் தேசியக் கொடியை ஏற்றியதாகவும் எனவே, தேசியக் கொடியை நிகழ்வு முடிவடையும் வரை இறக்க முடியாதென, மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், மாணவர் பிரிவுப் பொறுப்பாளர் புரட்சி இருவரும் இராணுவத்தினருக்கு எடுத்துக் கூறினர்.

ஆனாலும், இராணுவத்தினர் அந்த இருவரினதும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாது தேசியக் கொடி உடனடியாக இறக்கப்பட வேண்டுமென வலியுறுத்திய போதும் அங்கு கூடியிருந்த மக்களின் கடும் எதிர்ப்பினை அடுத்து படையினர் அங்கிருந்து அகன்று சென்றனர்.

பின்னர் பகல் 1.30 மணிவரை தேசிய எழுச்சிப் பேரவையின் நிகழ்வுகள் அமைதியான முறையில் நடந்து முடிந்தது. (10)

### ராணுவ புலனாய்வு...

னாய்வுத் துறையில் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் பிரிகேடியர் தயா இரத்நாயக்க, உளவுப் பிரிவில் ஆரம்ப காலத்தில் இருந்து பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஜீவன் கூலின்...

துரோகிகளிற்கு அனுமதியோம். "தேசியத்தின் ஆன்மாவிற்கு கேடுசெய்ய நினைப்பவனே பல்கலைக்கழகத்திற்குள் காலை வைக்காதே", "பல்கலைக்கழகத்தின் தேசியப்பற்றை துண்டுபோட நினைக்காதே" போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர்-

பேராசிரியர் ஜீவன் கூல் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் கடந்த காலங்களில் தமிழ்த் தேசியத்திற்கும், விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான கருத்துக்களை வெளியிட்டவர். எனவே இவரை பல்கலைக் கழகத்தினுள் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

### பளையில் நடந்த...

தர முகவரியாகவும், அல்வாய் தெற்கு, நெல்லியடியை தற்காலிக வசிப்பிடமாகவும்கொண்ட கந்தையா நவரத்தினம் (வயது 40) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழீழ இளையோர்....

தொடர்ந்து பொதுச் சுடரினை 1999 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த மேஜர் இன்பனின் பெற்றோரும், வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு அதிகாரி கே.விமலராஜன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து போட்டி வீரர்கள் சார்பில் திருகோணமலையைச் சேர்ந்த சி.றசிவ் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். நடுவர்கள் சார்பாகவும் நடுவர் ஒருவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

தொடர்ந்து ஒலிம்பிக் தீபத்தை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா வழங்க அதை போட்டிகளில் பங்குபற்றும் வீரரான சஞ்சிவ் மற்றும் வீராங்கனை யானதாரணி ஆகியோர் இரு வரும் பெற்றுக்கொண்டு ஓடிச்சென்று ஒலிம்பிக் தீபத்தினை ஏற்றி வைத்தனர்.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவின் ஆசியுரையைத் தொடர்ந்து மைதானப் போட்டிகளை யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் ஆரம்பித்து வைத்தார்.

இப்போட்டி இன்றும் தொடர்ந்து இடம்பெறும்.

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு புலிகளின் குரல் சிறப்பு ஒலிபரப்பு

(கிளிநொச்சி)

புலிகளின்குரலின் கரும்புலிகள் நாள் சிறப்பு ஒலிபரப்பில் நாளை காலை 6.30 தொடக்கம் இரவு 10.00 மணி வரை ஒலிபரப்பாகவுள்ள நிகழ்ச்சிகள்

6.30 இற்கு - ஆரம்பம் - தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் சிந்தனை. - மாவீரர்வணக்கம்.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை கரும்புலிகள் பற்றிப் பகிர்ந்து கொள்கிறார்.

7.30 இற்கு - செய்திகள் - அறிவித்தல்கள் அடுத்து - 'உயிர்மின்னல்' சிறப்புக் கவித்தொடரின் இறுதிப் பகுதி

7.55 இற்கு - நாளாந்த அவதானிப்பு போட்டி வினாவிடைகள்.

8.00 மணிக்கு - வில்லிசை ரட்ணா எழுதிய 'தடைநீக்கிகள்' தொடர்ந்து கவியும் கானமும்.

8.58ற்கு - பொதுச்சுடர் ஏற்றப்படும்.

9.00மணிக்கு - கரும்புலிகள் நாள் நிகழ்வுக்காக தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படும் - அவ்வேளையில் கொடிவணக்கப் பாடல் ஒலிபரப்பாகும். - தொடர்ந்து 'அகவணக்கம்' செலுத்தப்படும்.

அதனைத்தொடர்ந்து சி.கண்ணம்மா எழுதிய சிறப்பு நிகழ்ச்சி 'சுட்டும் வழிநடந்த சூரியக் குழந்தைகள்' அதனைத்தொடர்ந்து கவியும் கானமும்.

10.00மணிக்கு - சிறப்பு நிகழ்ச்சி - போராளி பிரமிளா எழுதிய 'நெருப்பு மனிதர்கள்'

10.30 இற்கு - சிறப்பு உணர்வலைகள் எழுதியவர் - போராளி நிலா.

11.00மணிக்கு - சிறப்பு நிகழ்ச்சி- கவிஞர் நாவண்ணன் எழுதிய - 'அழியாத ஆன்மாக்கள்'

11.30 இற்கு - அம்புலி எழுதிய - 'பெயர் குறிப்பிடாத துருவ உடுக்கள்' சிறப்பு நிகழ்ச்சி.

12.00மணிக்கு - வில்லிசை 'கணமணிகளே எங்கள் கரும்புலிகள்'

12.30ற்கு - 'காலத்தின் ஓவியங்களே நீங்கள் ஈழத்தின் காவியங்கள்' சிறப்பு நிகழ்ச்சி

1.00 மணிக்கு - செய்திகள் - தொடர்ந்து - கவிதையும் கானங்களும்.

1.30 இற்கு - சிறப்பு நிகழ்ச்சி - நா.யோகேந்திரநாதன் எழுதிய 'தூணிலும் துரும்பிலும்' தொடர்ந்து கவிதையும் கானங்களும்.

2.30 இற்கு - சிறப்பு நிகழ்ச்சி- வேலணையூர் சுரேஸ் எழுதிய - 'கோலமாய் நெஞ்சில் கொலுவிருக்கும் கரும்புலிகள்'

3.30 இற்கு - செய்திகள் - தொடர்ந்து

தமிழீழ அரசியற்றுறை மகளிர் துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழ்விழியின் உரை

4.30 இற்கு - செய்திகள் - அடுத்து சிறப்பு நாடகம் - க[illegible]கர்ண இந்து எழுதிய - 'பெயர[illegible] வருவேன்'

5.00 இற்கு - செந்திருவின் தயாரிப்பில் கரும்புலிகள் நாள் சிறப்பு நிகழ்ச்சி.

5.30 இற்கு - செய்திகள் - தொடர்ந்து கவிதையும் கானங்களும்.

6.15 இற்கு - சிங்கள மொழியிலான செய்தி அறிக்கை. தொடர்ந்து சிறப்புநிகழ்ச்சி செம்பருதி எழுதிய 'வாழ்வுக்கே வாழ்வைக்கற்பித்த வாசகங்கள்' அதனைத்தொடர்ந்து கவிதையும் கானங்களும். அடுத்து - 'அகங்களில் இருத்தி உறுதி கொள்வோம்'

7.05 இற்கு - கரும்புலி மாவீரர்களுக்கான பொதுச்சுடர் ஏற்றப்படும். அதனையடுத்து - முல்லைக் கமல் தலைமையில் - 'இருளைக் கலைத்த கரியமுகில்கள்' கவியரங்கம்.

7.30 இற்கு - செய்திகள் - அடுத்[illegible] 'உணர்வும் பகிர்வும்' தயாரித்[illegible] வழங்குபவர் வே.சுபா.

8.15 இற்கு - அகமும் புறமும். எழுதியவர் நா.யோகேந்திரநாதன்

8.30 இற்கு - செய்திகள் - அறிவித்தல்கள் - செய்திவீச்சு - அடுத்து கருத்துப் பகிர்வு

9.00மணிக்கு - மாங்கேணி இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்டதன் நினைவாக - பிருந்தா எழுதிய 'மறக்கமுடியாத மாங்கேணி' நினைவூட்டல்

9.30 இற்கு - செய்திகள் - தொடர்ந்து கவிதையும் கானங்களும

9.55 இற்கு - நாளாந்த அவதானிப்பு போட்டி வினாக்கள்

10.00மணிக்கு - ஒலிபரப்பு நிறைவு பெறும்.


## பிரதேச செய்தியாளர் தேவை

'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பிரதேச செய்தியாளர் தேவை. ஆர்வமுள்ள துடிதுடிப்பான ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சுய விபரத்துடன் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழுடன் விண்ணப்பங்களை -

பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

### செய்தியாளர் தேவைப்படும் பிரதேசம்

அல்வாய்
கரவெட்டி
உடுப்பிட்டி
வல்வெட்டித்துறை
பருத்தித்துறை
கரணவாய்

கைதடி
வரணி
நாவற்குழி
கொடிகாமம்
பளை

குருநகர்
கல்வியங்காடு

உரும்பிராய்
அச்சுவேலி
நீர்வேலி
இருபாலை
நவக்கிரி
கோப்பாய்

உடுவில்
இளவாலை
பண்டத்தரிப்பு
வட்டுக்கோட்டை
சங்கானை
மாதகல்

மல்லாகம்
தெல்லிப்பளை
ஏழாலை

கோண்டாவில்
புன்னாலைக்கட்டுவன்
இணுவில்
கொக்குவில்
சுன்னாகம்

ஊர்காவற்துறை
மண்டைதீவு
வேலணை



## Spoken English With Grammar

Lectures By.Mr.M.A.HARI

புதிய பிரிவு
ஆரம்பம்
06.07.2004 செவ்வாய்
மாலை 4 மணி

Tuesday / Thursday } 4.00 p.m - 6.00p.m.

HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அருகில்)
யாழ்ப்பாணம். C-2735



## பொதி விநியோக சேவையில் வெற்றிகரமான TNT இரண்டுவருடப் பூர்த்தி

20% விசேட கழிவு

சர்வதேச கூரியர் சேவை, உள்நாட்டு கூரியர் சேவை, சர்வதேச தபால் சேவை போன்ற சேவைகளுக்கு 20% சிறப்புத் தள்ளுபடியினை (20% Special Discount) வழங்குகின்றோம் என்பதை பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



தொடர்புகளுக்கு எமது புதிய முகவரி:
TNT கூரியர் சேவை
56/15, ஸ்ரான்லி வீதி,
(யாழ். பெரிய தபால்கந்தோருக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
Tel: 222 3771,
0777-270452, 0777-915824

நாங்கள் உங்கள் அன்பளிப்புப் பொருட்களை மட்டுமல்ல அவற்றோடு உங்கள் அன்பினையும் எடுத்துச் சென்று சேர்க்கின்றோம் என்பதை மறந்துவிடாதீர்கள்!

இவ் விசேட சலுகை 2004 ஜூலை 19 வரை மட்டுமே!

இத்துடன் ரூபா 200/= பெறுமதியான VOUCHER உம் வழங்கப்படும். இதனை இரண்டு மாதகாலத்துக்குள் சமர்ப்பிப்பவர்களுக்கு பொதிகளை அனுப்பும் போது கழிவு வழங்கப்படும்.

(சி/2733)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.